

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டு அறிக்கை - 2024
# ANNUAL REPORT


අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION, HIGHER EDUCATION AND VOCATIONAL EDUCATION

TVEC
තෘතියික හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාව
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION

# ஆணைக்குழுத் தகவல்

| | |
|---|---|
| நிறுவனம் | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு |
| அமைச்சு | கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு |
| முகவரி | 03ஆம் மாடி, “நிபுணதா பியச”, 354/2 எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு -05 |
| மின்னஞ்சல் | info@tvec.gov.lk |
| இணையம் | www.tvec.gov.lk |
| தொலைபேசி | 011 – 7608000 |
| தொலைநகல் | 011 - 2555007 |
| கணக்காய்வாளர்ல் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் |
| வங்கியாளர்ல் | மக்கள் வங்கி, Y.M.B.A கிளை, பொறள்ளை |

# ஆண்டறிக்கை

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையில் ஆர்வமுள்ள தரப்பினருக்கு இத் தகவல்களைக் கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். ஜனவரி 01, 2024 முதல் டிசம்பர் 31,2024 வரையிலான காலப்பகுதிக்கான மேற்கண்ட தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை, 2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் செயல்திறனைப் பற்றிய தெளிவான புரிதலைப் பெறுவதற்கான தகவல்களை மூலோபாய, நிதி மற்றும் நிதி அல்லாத செயல்திறன் எனும் வகையில் இந்த அறிக்கை வழங்குகிறது.**

## அறிக்கை கட்டமைப்பு

**ஆண்டறிக்கையைத் தயாரிக்கும் போது பின்வரும் பல்வேறு விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்து ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.**

## நிலைப்புத்தன்மையானதென அறிக்கையிடல்

- ✓ **மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க திருத்தச் சட்டம்**
- ✓ **1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் (பிரிவு 14)**
- ✓ **ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

## நிதிநிலை அறிக்கைகள்

- ✓ **இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கியல் தரங்கள்**
- ✓ **இலங்கையில் அரசாங்க பொது கணக்கியல் அமைப்புகள்**
- ✓ **நல்லாட்சிக்கான பொது முயற்சி வழிகாட்டுதல்கள் (அத்தியாயம் 06)**
- ✓ **2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்**

## பொருளடக்கம் பக்க எண

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு..............................104**

பிரதான குறிக்கோள்கள்

தொலைநோக்கு

TVEC தரக் கொள்கை

செயற்பணி

விழுமியங்கள்

**கூட்டு ஆளுகை அறிக்கை (Corporate Governance Report)..............................105**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை

மூன்றாம் நிலைகல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் நிர்வாக சபை........................................................106

நிர்வாக சபையின் பொறுப்பு

ஆணைக்குழுவின் கட்டமைப்பு

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

பதவிவழி மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்........................................107

ஆணைக்குழு கூட்டம்........................................................................................108

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை 1991-2024**........................................................116

**பணிப்பாளர் நாயகத்தின் செய்தி**........................................................118

**இடர் மதிப்பீடு மற்றும் தடுப்பு உத்திகள்**........................................................120

SWOT பகுப்பாய்வு

மூலோபாயங்கள்........................................................................................121

நிதி மற்றும் தொழிற்படு செயல்திறன்........................................................121

**நிதிநிலை செயற்திறன்**........................................................................................122

மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் திறைசேரி விடுவித்த தொகை (ரூ. மில்லியன்)

2024 இல் சேவைகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்..................................122

**நிதிப் பகுப்பாய்வு 2014- 2024 (ரூ. ல்லியன்)......................................................123**

**செயல்பாட்டு செயல்திறன்.....................................................................124**

திட்டங்களை வகுத்தல்

தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் ஆராய்ச்சி கற்கைகளை செயற்படுத்துதல்...............................................................124

புதிய ஆராய்ச்சி கற்கைகள் – 2024....................................................................124

தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறைக்கான தேசிய அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்.........................................................................................125

தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்கள் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்...........................................................................................126

**தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள்**.......................................................128

அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் - 2024

தேசிய தேர்ச்சித் தரங்கள் மட்டும் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்கள்...........................................................................................129

பாடவிதானங்கள் மட்டும் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்கள்....129

புதிய தேர்ச்சித் தரங்கள் வெளியீடு  நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்...........................................................................................130

நிறுவனங்களுக்கு இடையேயான தேசிய தொழிற்திறன் தகுதி வழிநடத்தல் குழுக் (NVQ Steering Committee) கூட்டங்களை நடாத்துதல்...........................................................................................131

தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை குழு

பயிற்சி நிறுவனங்களுக்கான தர உத்தரவாத நடைமுறைகள் கடைபிடிப்பு....131

**தொழிற் பயிற்சி நிறுவன பதிவு**....132

பதிவு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களின் பதிவுகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குதல்....133

பாடநெறி தராதர அங்கீகாரம்

தர முகாமைத்துவ முறைமை நிறுவல் மற்று சான்றளிப்பு....134

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) விருதளித்தல்

தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 4 ஐ விருதளிப்பதற்கான பொது அறிவுசார் கணிப்பீட்டை நடாத்துதல்....135

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 05 மற்றும் 06 இற்கான எழுத்துமூல பரீட்சை நடாத்துதல்

தேர்ச்சிசார் கணிப்பீட்டு அலுவல்களை ஒழுங்குபடுத்துதல்....137

2006 தொடக்கம் 2024 வரை வழங்கப்பட்ட NVQ சான்றிதழ்களின் புள்ளிவிபரவியல்....141

தேசிய தொழிற்திறன் தகுதிகளை வழங்காத பாடநெறிகளை தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5/6 இற்கு சமனாக்கம்/ மேப்பிங் செய்தல்....143

தொழில் முதிர்ச்சி பெற்ற தேர்வுநாடிகளுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 5 இற்கு சமனாக்கம் செய்தல்....144

**தகவல் முறைமை**....146

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்தை அபிவிருத்தி செய்து பராமரித்தல்

தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்....148

தொழிற்சந்தை தகவல் இணைய பக்கம்

பதிவு மற்றும் தராதர அங்கீகார இணைய பக்கம்.....................................148

புதிய துணை அமைப்புகளைச் சேர்ப்பதன் மூலம் NVQ ஆன்லைன் முறைமையை மேம்படுத்துதல்..........................................................................149

**இணையம், மின்னஞ்சல் மற்றும் வசதிகள்**

ஆணைக்குழுவின் நூலகம்.................................................................................150

பயிற்சி அமர்வுகளை நடாத்துதல்

ஸ்கில்ஸ் பாஸ்போர்ட் (Skills Passport) வழங்குதல்

**கைத்தொழிற்துறை உறவுகள்**...........................................................................................151

அறிமுகம்

துறைசார் திறன் சபைகளை நடாத்திச் செல்லல்........................................151

கட்டுமானத் துறைசார் திறன்கள் சபை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை.........................................................................................................................152

உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை

சுற்றுலாத் துறைசார் திறன்கள் சபை

விவசாயத் துறைசார் திறன்கள் சபை

மோட்டார் வாகனத் துறைசார் திறன்கள் சபை

சுகாதாரம் மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆலோசனைக் குழு............153

பொதியிடல் (பேக்கேஜிங்) தொழில் ஆலோசனைக் குழு

துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்ற மீளாய்வு

தொழிற்கல்வியில் ஆர்வமுள்ள பங்குதாரரர்களுக்குதெரியப்படுத்துவதற்கான (விழிப்புணர்வு) விசேட வேலைத்திட்டம்.......................................................................................................155

**வெளியீடுகள்**.........................................................................................................................158

தொழிற்சந்தை தகவல் பருவ வெளியீடு

தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி (TVEC Guide)

TVEC செய்திமடல்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் ஆராய்ச்சிக் கற்கைகள்........158

**தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்துதல்**........159

ஆணைக்குழுவின் மனித வளம்........159

2024 இல் சேவையை விட்டு விலகியவர்கள்/ ஓய்வு பெற்றவர்கள்......160

2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பதிற் கடமையாற்றுதல்/ கடமையை ஆவரணப்படுத்தல்

உள்ளூர் பயிற்சி........162

வெளியூர் பயிற்சி........162

வருடாந்த தொழில்சார் அங்கத்துவக் கட்டணம் மீளளிப்பு........164

**உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை**........166

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை........166

2024 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கட்டமைப்பு........167

**சட்ட அலுவல்கள்**........168

சட்டத்தை திருத்துவதில் முன்னேற்றம்........168

முடிக்கப்பட்ட வழக்குகள்........168

**தேசிய தொழிற்திறன் தகுதிகள் சுற்றறிக்கைகள்**........170

**2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்று**........171

**2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்று**........173

**2024ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு தேறுமதியில் மாற்றங்கள்**........175

**2024ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று**........176

**2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள்**....................................178

**2024ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய உப குறிப்புகள்**..........................186

**2024ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய உப குறிப்புகள்**..........................191

**2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றிற்கான அட்டவணை**..........................................................193

**நிதிசார் சிறப்பம்சங்கள் 2024**.....................................................................................196

**தணிக்கை அறிக்கை.......................................................................................199**

**தலைமை கணக்காய்வாளர் அறிக்கைக்கான பதில்கள்..........................208**

# மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டத்தின் கீழ் தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறையின் ஒழுங்குபடுத்தல்கள் அமைப்பாக 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01 ஆந் திகதி தாபிக்கப்பட்டதுடன், 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினூடாக TVET துறைக்கான ஆராய்ச்சி நடாத்துதல், தொழிற் தகவல் முறைமையை மேம்படுத்துதல், நிதியுதவியளித்தல் மற்றும் TVET துறையில் சோதனை மற்றும் தரச் சான்றிதழுக்காக முகாமைத்துவ முறைமையை நிறுவுதல் போன்ற மேலதிக அதிகாரங்களுடன் இவ்வாணைக்குழு மீளத்தாபிக்கப்பட்டது. நாட்டின் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்சார் கல்வியின் கொள்கை உருவாக்கம், திட்டமிடல், தர உத்தரவாதம் மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியின் உயர் தரத்தை பராமரிப்பதே ஆணைக்குழுவின் முதன்மைப் பொறுப்புகள் ஆகும்.

### பிரதான குறிக்கோள்கள்

(அ)பொருளாதாரத்தின் மனிதவளத் தேவைகளுக்கு இசைவாக சகல மட்டங்களிலும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை கொள்கை வகுத்தல், திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்;

ஆ) சான்றிதழ் அடங்கலாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி விருதுகளை வழங்குவதற்காவும் மற்றும் ஏனைய கல்விசார் தகைமைகளை அளிப்பதற்காகவும் தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறைமையை அபிவிருத்தி செய்தல்; மற்றும்

(இ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை வழங்கும் நிறுவகங்கள், முகவர்கள் மற்றும் ஏனைய சகல தாபனங்களினதும் கல்வி மற்றும் பயிற்சி தராதரங்களைப் பேணல்.

### தொலைநோக்கு

நாட்டின் மனித வள மேம்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உயர் தரமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை அனைத்து குடிமக்களும் அணுகக்கூடிய ஓர் இலங்கை.

### செயற்பணி

TVET துறைக்கான ஒழுங்குமுறை அமைப்பாக, சமூக-பொருளாதார நோக்கங்கள் மற்றும் மாறிவரும் சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப பயனுறுதியும் வினைத்திறனும் வாய்ந்த மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி முறையை நிறுவி நடைமுறைப்படுத்துதல்

### விழுமியங்கள்

உயர் ஒருமைப்பாடு, உயர் தரத்திற்கான அர்ப்பணிப்பு, புதுமை, குழு உணர்வு, புதிய தொழில்நுட்பத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிலைத்தன்மை மற்றும் பங்குதாரர்களுடன் பணியின் மூலம் சமமான உபசரிப்புக்கு இவ்வாணைக்குழு உறுதிபூண்டுள்ளது.

### TVEC தரக் கொள்கை

NVQ தகுதிகள் மற்றும் எங்களுடன் பதிவு செய்யப்பட்ட தொழில் பயிற்சி வழங்குநர்களுக்கு அங்கீகாரம் பெற்ற பாடநெறிகளில் பயிற்சி வழங்குநர்களுக்கு நாங்கள் வழங்கும் சேவைகளின் தரத்திற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

நாம் வழங்கும் சேவைகளின் தரத்தை உறுதிசெய்து பராமரித்துக்கொள்வதாக ISO 9001:2015 இற்கு இணங்க தர முகாமைத்துவ முறைமையை நிறுவியுள்ளோம். தர முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்வதற்கும் மற்றும் எங்கள் சேவைகளின் செயல்திறனை மேம்படுத்தவும் நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறோம்.

சுற்றியுள்ள சுற்றுச்சூழலை பாதுகாத்துக்கொண்டு இந்தக் கூட்டு நோக்கங்களை அடைவதற்கான மனித வள முகாமைத்துவ முறைமையை நாம் பராமரித்து வருகிறோம்.

## கூட்டு ஆளுகை அறிக்கை (Corporate Governance Report)

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளில் ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரும் நியாயம், சமத்துவம், நம்பகத்தன்மை மற்றும் பொறுப்புணர்வோடு தேவையான சேவைகள் மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு, ஆணைக்குழு நிர்வாக சபையின் மேற்பார்வை/ஒப்புதலின் கீழ் தேவையான விதிமுறைகள் மற்றும் செயன்முறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றது. ஆணைக்குழு இணையதளத்தில் சுற்றறிக்கைகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்களை வெளியிடுவதன் மூலம் ஆர்வமுள்ள தரப்பினர் அவற்றை அணுகக்கூடிய விதமாக நிறுவன சேவைகளின் வெளிப்படைத்தன்மை உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிறுவனத்தின் தொழிற்பாடுகளை உயர் செயல்திறனுடன் வழிநடத்த தேவையான நிர்வாக முடிவுகளை நிர்வாக சபை எடுத்துள்ளது.

## மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை

ஆணைக்குழு சட்டத்தின் நோக்கங்களை அடைய மூன்றாம் நிலைக்கல்வி , தொழிற் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான முழு செயல்முறையையும் செயல்படுத்துவது ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். எமது ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையில் ஆறு (06) பணிப்பாளர்களும் மற்றும் பதில் பணிப்பாளர் ஒருவரும் உள்ளடங்குவதுடன், அந்த அதிகாரிகள் ஆற்றிய கடமைகள் பின்வருமாறு.

- தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல், ஆராய்ச்சி நடாத்துதல், தொழிற் சந்தை தகவல் அமைப்பை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்

- தேசிய தொழிற்திறன் தகுதி முறையை செயல்படுத்துவதற்கான தேசிய தேர்ச்சி தரங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில்துறையின் தேவை கண்டறிதல் மற்றும் கணிப்பீட்டு அளவுகோல்கள்/முறையியல் மற்றும் எழுத்துப்பூர்வ கணிப்பீடுகளை நடாத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்

- பயிற்சியின் தரத்தை உறுதிப்படுத்த பயிற்சி நிறுவனங்களின் பதிவு மற்றும் பாட நெறிகளின் தராதர அங்கீகாரம்

- தொழில்சார் தகவல்களைப் பெறுதல், தொழில்துறை இணைப்புகளை உருவாக்குதல், வழிகாட்டுதல்களை உருவாக்குதல் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையில் முன்னேற்றத்திற்கான துறைசார் திறன்கள் சபைகளை ஒருங்கிணைத்தல்

- நவீன தொழில்நுட்பத்தின்படி ஒவ்வொரு துறையிலும் பராமரிக்கப்படும் தகவல் அமைப்புகளை நிறுவுதல், புதுப்பித்தல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல்

- அரசின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைச் செயல்படுத்துவதன் மூலம், மனித வள முகாமைத்துவம், பிற துறைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல், அனைத்து நிதிச் செயல்பாடுகளையும் நிர்வகித்தல் மற்றும் அவற்றைக் கணக்கீடு நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து வெளியிடுதல்.

# மூன்றாம் நிலைகல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் நிர்வாக சபை

## நிர்வாக சபையின் பொறுப்பு

ஆணைக்குழுச் சட்டத்தின் நோக்கங்களைப் பூர்த்தி செய்ய விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் தொடர்புடைய மதிப்பீடு உட்பட மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் முழு செயல்முறையையும் மேற்பார்வையிடுவதற்கு நிர்வாக சபை பொறுப்பாகும்.

## ஆணைக்குழுவின் கட்டமைப்பு

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இந்த ஆணைக்குழு 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி (திருத்தம்) சட்டத்தின் விதிகளின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தலைவர் உட்பட 17 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

## ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

- கலாநிதி.(எந்திரி.) உதேனி விக்கிரமசிங்க – தலைவர்
  மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
- பேராசிரியர் திரு. டி.எம். பந்துல பஹலவத்த - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- திரு. எம்.ஜி.கே.எம்.பெர்னாண்டோ - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- திரு. பி.ஏ.டி.ஆர்.சந்திரசிறி - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- திரு. கனிஷ்க வீரசிங்க - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- பேராசிரியர் திருவதி என்.ஆர். அபேநாயக்க - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- திரு. ஜயந்த விஜேசிங்க - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- திரு. மஞ்சுள ஹிரண்ய டி சில்வா - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- பேராசிரியர் திரு. சுதந்த லியனகே - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- பேராசிரியர் திரு. எச்.எச்.சுமதிபால - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி
- திரு. சரத் சந்திரா மொஹொட்டி - உறுப்பினர்
  கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி

## பதவிவழி மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

- கலாநிதி திரு. கே.ஏ.லலிததீர - உறுப்பினர்
  பணிப்பாளர் நாயகம்
  மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

- திரு. ருச்சிக அமரசேகர - உறுப்பினர்
  தலைவர்
  தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

- ஏயார் வைஸ் மார்ஷல் பிரசன்ன ரணசிங்க – உறுப்பினர்
  தலைவர்
  இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
  (2023.03.31 தொடக்கம் 2024.03.26 வரை)

- திரு. குமார ராஜபக்ஸ – உறுப்பினர்
  தலைவர்
  இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
  (2023.04.30 தொடக்கம்)

- திரு. எஸ்.சி.ஜெகத் - உறுப்பினர்
  பணிப்பாளர் நாயகம்
  தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

- கலாநிதி. எஸ்.சி. லெவன் கமகே - உறுப்பினர்
  பணிப்பாளர் நாயகம்
  இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்
  (2023.06.27 தொடக்கம் 2024.01.30 வரை)

- திரு. அதாவுட செனவிரத்ன - உறுப்பினர்
  பணிப்பாளர் நாயகம்
  இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்
  (2024.02.27 தொடக்கம் )

- திருவதி. ஹர்ஷனி பெர்னாண்டோ - உறுப்பினர்
  நிதியமைச்சு
  திறைசேரி பிரதிநிதி
  (2022.09.30 தொடக்கம் 2024.01.30 வரை)

- திருவதி. ஆர்.எம்.கே.ஜி. சஞ்ஜீவனீ - உறுப்பினர்
  நிதியமைச்சு
  திறைசேரி பிரதிநிதி
  (2024.02.27 தொடக்கம்)

## ஆணைக்குழு கூட்டம்

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்ட அலுவல்கள்) ஆணைக்குழு சபையின் செயலாளராகவும் செயல்படுவதுடன் 2024 இல் 10 நிர்வாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.**

### கலாநிதி.(எந்திரி.) உதேனி விக்கிரமசிங்க



**நிபுணத்துவம்**
எந்திரவியல் பொறியியலாளர், விஞ்ஞானம் மற்றும் தொழிற்பயிற்சித் துறை

**தகுதிகள்**
கொத்தலாவ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் (PhD), மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் (MSc.), மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கான முதுகலைப் பட்டம் (M.Ed) மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப்பட்டம் (BSc (Eng))

**தற்போதைய பதவி**

கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளராக பணியாற்றிய பின்பு 27 ஜனவரி 2021 முதல் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைவராக பணியாற்றுகிறார்.

### கலாநிதி திரு. கே.ஏ.லலிததீர



**நிபுணத்துவம்**
பொருளாதாரம், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி

**தகுதிகள்**
கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்திற்கான கலாநிதிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்திற்கான முதுகலைப்பட்டம் மற்றும் ருஹுணு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்திற்கான இளங்கலைப் பட்டம். தொழில்சார் முகாமைத்துவ நிறுவகத்தில் முழு அங்கத்துவம் (FCPM)

**தற்போதைய பதவி**
27 ஏப்ரல் 2021 முதல் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகிறார்

## பேராசிரியர் திரு. டி.எம். பந்துல பஹலவத்த



**நிபுணத்துவம்**

செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம், சேவை முகாமைத்துவம் மற்றும் தர முகாமைத்துவம்

**தகுதிகள்**

1981 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணித பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றதுடன் 1987 இல் பெல்ஜியம் லுயென் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.

**தற்போதைய பதவி**

1982 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வணிக பீடத்தில் வணிக நிர்வாகம், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தீர்மான அறிவியல் துறைகளில் பணிபுரிந்துள்ளதுடன் தற்போது தீர்மான அறிவியல் துறையில் மூத்த பேராசிரியராக

## திரு. எம்.ஜி.கே.எம்.பெர்னாண்டோ



**நிபுணத்துவம்**

இலங்கை நிர்வாக சேவை

**தகுதிகள்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டதாரியான இவர் 1984 ஆம் ஆண்டு முதல் இலங்கை நிர்வாக சேவையில் நிரந்தர அதிகாரியாக பல அமைச்சுக்களில் பணியாற்றியுள்ளார்.

**தற்போதைய பதவி**

2019-2020 ஆண்டுகளில் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு உறுப்பினராகப் பணியாற்றி, தற்போது தேசியக் கல்வி ஆணைக்குழுவின் துணைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

## திரு. பி.ஏ.டி.ஆர்.சந்திரசிறி



**நிபுணத்துவம்**

சிவில் பொறியியல் துறை

**தகுதிகள்**

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் இங்கிலாந்தில் உள்ள சிட்டி அண்ட் கில்ட்ஸ் நிறுவனத்தில் சிவில் பொறியியல் பட்டதாரி. இலங்கை ஒருங்கிணைந்த பொறியியலாளர்கள் நிறுவகம் மற்றும் இலங்கை பட்டய நிபுணத்துவ முகாமையாளர்கள் நிறுவகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்.

**தற்போதைய பதவி**

இலங்கையின் ஒருங்கிணைந்த பொறியியலாளர்கள் நிறுவகத்தின் அங்கீகார சபையின் உறுப்பினராக சேவையாற்றுகிறார். இலங்கை பொறியியலாளர்கள் சபையின் தற்போதைய உறுப்பினராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தராதர அங்கீகாரக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

## திரு. கனிஷ்க வீரசிங்க



**நிபுணத்துவம்**

சட்டத்தரணி

**தகுதிகள்**

இளங்கலைப் பட்டம் உட்பட சர்வதேச விவகாரங்களில் முதுகலைப் பட்டப்படிப்புத் தகுதிகளைப் பெற்றுள்ளார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் (NUS) முகாமைத்துவம் தொடர்பான நிறைவேற்றுக் கல்விப் பட்டம் பெற்றுள்ளார். இவர் தற்போது சர்வதேச விவகாரங்களில் (சர்வதேச தொழிலாளர் தரநிலைகள்) முனைவர் பட்டம் பெறுவதற்கான கற்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

**தற்போதைய பதவி**

இலங்கை தொழில் தருநர்கள் (முதலாளிகள்) சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம்/தலைமை நிர்வாக அதிகாரியாக 2021 மார்ச் வரை கடமையாற்றிய இவர் மீண்டும் வழக்காடு அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

## பேராசிரியர் திருவதி என்.ஆர். அபேநாயக்க



**நிபுணத்துவம்**

வியாபாரப் புள்ளிவிபரவியல் துறை

**தகுதிகள்**

2017 இல் பேராசிரியராக நியமிக்கப்பட்ட இவர், 1995 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலை அறிவியல் (B.Sc. - Hons) பட்டத்தையும் மற்றும் 2001 இல் முதுகலைப் பட்டத்தையூம (MSc.) பெற்றுள்ளார். 2008 இல் இந்தியாவின் புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் புள்ளிவிபரவியல் நிறுவகத்தில் முனைவர் பட்டத்தையும் (PhD) பெற்றுள்ளார்.

**தற்போதைய பதவி**

தற்போது இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவில் பிரயோக புள்ளிவிபரவியல் பேராசிரியராகப் பணிபுரியும் இவர் தனது ஏழு வருட ஓய்வினை விடுமுறைக்காக இங்கிலாந்தின் மான்செஸ்டர் பெருநகரப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராகப்

## திரு. ஜயந்த விஜேசிங்க



### நிபுணத்துவம்

தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் உறவுகள்

### தகுதிகள்

இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் தனது BA பட்டப்படிப்பின் முதல் பாகத்தை முடித்துள்ளதுடன் வெகுஜன தொடர்பு மற்றும் சமூக அபிவிருத்திக்கான டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

### தற்போதைய பதவி

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர் உறவுகள் பிரிவின் உதவிச் செயலாளராகவும், களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை கம்பெனியில் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் அதே தேயிலைத் தொழிற்சாலையின் கணக்காய்வுக் குழு உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

## திரு. மஞ்சுள ஹிரண்ய டி சில்வா



### நிபுணத்துவம்

கணக்கியல் மற்றும் முகாமைத்துவம்

### தகுதிகள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்பு பட்டமும், லண்டன் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளார். மேலும் இவர் பட்டய முகாமைத்துவக் கணக்காளராகவும் உள்ளார்.

### தற்போதைய பதவி

இவர் 2023 ஜனவரி 31 வரை இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். தற்போது CENTRAL FINANCE நிறுவகம் மற்றும் BBPL ஹோல்டிங் நிறுவகத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிகிறார். கொழும்பு பல்கலைக்கழகம், சனச பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியாவில் உள்ள எடித் கோவன் பல்கலைக்கழகம் உட்பட பல உயர்கல்வி நிறுவகங்களில் வெளிவாரி விரிவுரையாளராகவும் இவர் உள்ளார்.

## பேராசிரியர் திரு. சுதந்த லியனகே



**நிபுணத்துவம்**

இரசாயண விஞ்ஞானம், இரசாயணக் கைத்தொழில்துறை, கல்வி, உயர் கல்வி, தேர்தல் முறை மற்றும் கொள்கைகள் போன்ற பல்துறை சார்ந்த அனுபவம் கொண்ட பேராசிரியர்.

**தகுதிகள்**

கலாநிதிப் பட்டம் - ஐக்கிய இராச்சியத்தின் வேல்ஸ்லிலுள்ள கார்டிஃப் பல்கலைக்கழகம்

கலாநிதிப் பட்டத்திற்கு பிந்தைய பட்டம் – அவுஸ்திரேலியாவிலுள்ள அடிலேய்ட் பல்கலைக்கழகம், ஜப்பான் இபராகி பல்கலைக்கழகம்
இரசாயணவியல் சிறப்புப் பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**தற்போதைய பதவி**

ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2022 வரை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 26 ஆவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். 1 ஆகஸ்ட் 2022 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஐக்கிய இராச்சியத்தின் பொதுநலவாய பல்கலைக்கழகங்கள் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பேராசிரியர் திரு. எச்.எச்.சுமதிபால



திட நிலை பௌதீகம்

**தகுதிகள்**

2020 இல் பௌதீக விஞ்ஞான மூத்த பேராசிரியராக நியமிக்கப்பட்ட இவர் 1985 இல் களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் (Second Class Upper Division) பட்டம் பெற்று 1986 பேராதனைப் பல்கலைக் கழகத்தில் Mphil பட்டத்தையும் பெற்றுள்ளார். பட்டப்பின் படிப்பு தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்டுள்ளார்.

**தற்போதைய பதவி**

சர்வதேச அணுசக்தி முகவர் (IAEA) தொழில்நுட்ப ஒத்துழைப்புப் பிரிவின் ஒருங்கிணைப்பின் கீழ் அணுசக்தி தொழில்நுட்ப கல்விக்கான ஆசிய வலையமைப்பின் (ANENT) திட்டமான சர்வதேச அணு அறிவியல் ஒலிம்பியாட் (INSO) இன் வழிநடத்தல் குழு உறுப்பினராகவும் சர்வதேச ஜூனியர் சயின்ஸ் ஒலிம்பியாட் (IJSO) இன் இலங்கை ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றுகிறார்.

## திரு. சரத் சந்திரா மொஹொட்டி



**நிபுணத்துவம்**

ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறை

**தற்போதைய பதவி**

கலதாரி ஹோட்டல், கோல் ஃபேஸ் ஹோட்டல் மற்றும் வாட்டர்ஸ் எட்ஜ் ஆகியவற்றில் பொது முகாமையாளராகவும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். தற்போது பொதுநலவாய ஹோட்டல்கள் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.

## திரு. ருச்சிக அமரசேகர



**தற்போதைய பதவி**

தலைவர் - தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

## திரு. எஸ்.சி.ஜெகத்



**நிபுணத்துவம்**

முகாமைத்துவம் மற்றும் பொருளாதாரத் துறை

**தகுதிகள்**

ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் BSc முகாமைத்துவம் மற்றும் பொருளாதாரம் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் MSc (தென் கொரியா)

**தற்போதைய பதவி**

திரு. எஸ்.சி.ஜெகத் அவர்கள் தற்போது தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுகிறார்

## திருவதி. ஹர்ஷனி பெர்னாண்டோ



**நிபுணத்துவம்**

கணக்கியல் மற்றும் நிர்வாகம்

**தகுதிகள்**

களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பிரிவில் முதுகலைப் பட்டதாரியான இவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டதாரியும் ஆவார்.

**தற்போதைய பதவி**

இலங்கை கணக்கியல் சேவையில் முதல் தர அதிகாரியான இவர் தற்போது நிதி அமைச்சின் திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.

## பிரசன்ன ரணசிங்க



**நிபுணத்துவம்**

இலங்கை விமானப் படையில் இளைப்பாறிய ஏயார் வைஸ் மார்ஷல்

**தகுதிகள்**

பிரசன்ன ரணசிங்க அவர்கள் 2021 இல் இலங்கை திறந்த பல்கலைக்கழத்தில் சட்டத்துறை பட்டத்தையும் மற்றும் 2005 இல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் (பாதுகாப்பு கற்கைகள்) தொடர்பான பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன், 2011 இல் பங்களாதேஷ் தொழிற்துறை பல்கலைக்கழகத்தில் இராணுவ கற்கைகள் தொடர்பான பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் 2018 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள தொடர்பான பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், 2019 இல் பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் தேசிய பாதுகாப்பு மற்றும் யுத்த கற்கை தொடர்பான பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் 2022 இல் பேர்மிங்காம் சிட்டி பல்கலைக்கழகத்தில் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பான பட்டத்தையும் (LLM) பெற்றுள்ளார்.

**தற்போதைய பதவி**

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தலைவர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றுகிறார்.

## பேராசிரியர் சீ.எஸ்.லெவன் கமகே



### நிபுணத்துவம்

சிவில் பொறியியல் தொடர்பான பேராசிரியர்

### தகுதிகள்

பேராசிரியர் சீ.எஸ்.லெவன்கமகே அவர்கள் 1998 இல் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் பட்டப்படிப்பை பெற்றதுடன் 2001 இல் ஜப்பான் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பையும் பெற்று பின்பு அதே பல்கலைக்கழகத்தில் 2004 இல் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

### தற்போதைய பதவி

பேராசிரியர் லெவன்கமகே அவர்கள் கல்வி அமைச்சிலுள்ள இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் தற்போதைய பணிப்பாளர் நாயகம் ஆவார்.

## மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை 1991-2024

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வளர்ச்சிக்கும் மற்றும் அதன் தரத்தை உயர்த்துவதற்கும் இவ் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதிலிருந்து தனித்துவமான பணிகளைச் செய்து வருகிறது. இந்த தனித்துவமான செயல்பாடுகளின்/ பணிகளின் சுருக்கமான குறிப்புகள் (வருட ரீதியாக) பின்வருமாறு:

**1992**
பயிற்சி நிறுவனங்களுக்கான இடைக்கால பதிவு

**1995**
பயிற்சி நிறுவனங்களை பதிவு செய்வதற்கான அபிவிருத்தித் திட்டம் (07 செப்டம்பர் 1995 அன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு)

**1998**
நிறுவன பதிவு ஆரம்பம் ("P" இலக்கம் நிறுவனங்களுக்கு வழங்குதல்)

தொழிற் சந்தை தகவல் பருவவெளியீடு ஆரம்பம்

**1999**
1999 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டத்தினூடாக (திருத்தம்) கூடுதல் அதிகாரங்களுடன் சட்டபூர்வ அதிகாரசபையாக மீளத் தாப்பிப்பு

வளர்ந்து வரும் கைத்தொழிற் துறைகளுக்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை (VET Plan) தயாரித்தல் ஆரம்பம்

**2000**
தேசிய திறன்களின் அடிப்படையில் பயிற்சி திட்டங்களுக்கு பாடநெறி தராதர அங்கீகாரம்

**2003**
மூன்றாம் நிலைக்கல், தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையதளத்தின் அபிவிருத்தி மற்றும் ஆணைக்குழு அலுவல்களுக்கான உத்தியோகபூர்வ மின்னஞ்சல் வசதி அறிமுகம்

**2004**
இலங்கையின் தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறு (NVQ Framework) தாபிப்பு

**2005**
ஆணைக்குழுவில் ஆராய்ச்சிப் பிரிவு ஆரம்பம்

**2006**
தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களால் நடாத்தப்படும் பயிற்சி பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளிப்பு மற்றும் NVQ தகுதிகள் விருதளிப்பு

இலங்கையின் தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறுவை மற்றைய நாடுகளுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்

**2007**
மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டம் தயாரிப்பு ஆரம்பம்

முதலாவது தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ் விருதளிப்பு விழா பெப்ரவரி 2007 இல் நடைபெற்றது

**2008**
தொழில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு நிதி உதவி வழங்குதல் ஆரம்பம்

**2009**
தராரதர அங்கீகாரம் பெற்ற தனியார் பயிற்சி நிறுவனங்களால் வழங்கப்படும் தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழுக்கான அரச இலச்சினையைப் பயன்படுத்த அனுமதி

கணிப்பீட்டாளர்களின் தரவுத்தளத்தை பராமரித்தல் மற்றும் கணிப்பீட்டாளர்களைப் பயிற்றுவித்தல் விரிவாக்கம்

**2011**
ஆணைக்குழு இணைய தளத்தில் தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) பொதுச் சுற்றறிக்கைகளை வெளியிடுதல் ஆரம்பம்

தேசிய தொழிற்திறன் தகுதிக்குச் (NVQ) சமமான சான்றிதழ்களை விருதளித்தல் ஆரம்பம்

**2012**
ஆணைக்குழுவின் பரீட்சை மற்றும் கணிப்பீட்டுப் பிரிவை தாபித்து தொழிற்படுவதற்கு அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி

**2013**
நிகழ்நிலை (ஆன்லைன்) முறையினூடாக பயிற்சி நிலையப் பதிவுக்காக விண்ணப்பித்தல் ஆரம்பம்

**2016**
நிறுவன பதிவுச் சான்றிதழ் மின்னணு முறையினூடாக விநியோகித்தல் (e-Certificate) அறிமுகம்

**2020**
மாற்றுத்திறனாளிக்கு நியாயமான தேர்ச்சிசார் கணிப்பீட்டை நடாத்துவதற்கான வசதி (சுற்றறிக்கை மற்றும் கருவிப்பொதி)

தேசிய தொழிற்திறன் தகுதிகளைப் (NVQ) பெறுவதற்தான நடவடிக்கைகளை துரித்தப்படுத்திக் கொள்ள தன்னியக்க முறைமை (Automated System) அறிமுகம்

திறன் கடவுச்சீட்டு (Skills Passport) அறிமுகம்

**2021**
அனுபவத்தின் அடிப்படையில் தேசிய தொழிற்திறன் தகுதிகளை (NVQ) விரைவாகப் பெறுவதற்கான மின்னணு முறைமை (e- RPL System) அறிமுகம்

மேம்படுத்தப்பட்ட குறியீட்டுடன் (QR Code) NVQ சான்றிதழை வழங்குதல் ஆரம்பம்

**2023**
NVQ மட்டம் 04 இற்கான நிகழ்நிலை (ஆன்லைன்) முறையினூடாக பரீட்சையை நடாத்துவதற்கு வினா வங்கி தயாரிப்பு மற்றும் உத்தியோகபூர்வ தொடக்கி வைப்பு வைபவம் 2023.11.30 நடைபெற்றமை

**2024**
தேசிய தொழிற்திறன் தகுதி வழங்குவதற்கான அறிவுசார் கணிப்பீடு நிகழ்நிலை (ஆன்லைன்) முறையில் நடாத்துதல் ஆரம்பிப்பு

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வியின் ஒழுங்குமுறை அமைப்பான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2024ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை எங்கள் நிறுவனத்தில் ஆர்வமுள்ள அனைவருக்கும் வழங்குகிறேன். ஆணைக்குழு சட்டத்தின் நோக்கங்களைச் செயல்படுத்தி, தொழிற்கல்வியை ஒழுங்குபடுத்துவதன் மூலம், உயர் தர உத்தரவாதமளிக்கப்பட்ட தொழிற்கல்வி பெற்ற பணியாளர்களை உருவாக்குவதற்கான பணிகளை இந்த அறிக்கை பிரதிபலிக்கிறது.

மீளாய்வாண்டில் (2024) மூலதனச் செலவினங்களுக்காக ரூ. 14.2 மில்லியனையும், மீள்வரும் செலவினங்களுக்காக ரூ.196.35 மில்லியனையும் திறைசேரி விடுவித்ததுடன் எமது நிறுவனம் ஈட்டிய மொத்த வருமானம் 135.7 மில்லியன் ரூபாவாகும். மேலும், வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்களின் ஆதரவுடன் நிறுவனத்தின் பௌதீக இலக்குகளை அடைவதற்கு இயலுமாயிருந்தது.

மேலும், தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையில் பயிற்சித் தேவைகளைக் கண்டறிவதற்கான 22 தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் 2024ஆம் ஆண்டு வரைக்கும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 18 திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், 2024 ஆம் ஆண்டில், மூன்று (03) புதிய ஆராய்ச்சி கற்றை அறிக்கைகள் வெளியிடப்பட்டு,மேல்மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டம் வெளியிடப்பட்டதுடன், அதன் செயல்திட்டத்தைநடைமுறைப்படுத்து வதற்காக மேல்மாகாண சபையிடம் தயாரிக்கப்பட்ட திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது..

தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆணையத்தின் கீழ் பதிவு செய்யப்படுவது சட்டப்பூர்வ்வான தேவைப்பாடாகும். அதன்படி, 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 1696 செல்லுபடியாகும் பதிவு நிறுவனங்கள் இருந்தன. 2024 ஆம் ஆண்டில் புதிதாக பதிவுசெய்யப்பட்ட 280 தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பதிவு புதுப்பிக்கப்பட்ட 601 பயிற்சி நிலையங்கள் இதில் அடங்கும். அத்துடன், வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்காக 1857 பதிவு உறுதிப்படுத்தல் கடிதங்களை ஆணைக்குழு வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கியது.
தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) கட்டமைப்பை செயல்படுத்துவதற்காக, 2024 ஆம் ஆண்டில் புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், அவ்வாண்டில் தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்களுக்கு அமைவாக தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட பாடநெறிகளின் மொத்த எண்ணிக்கை 1469 ஆகும்.

2024 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்திறன் தகுதி வரையறுவை செயற்படுத்துவதற்கான கொள்கைக் குழுக் கூட்டங்கள் மற்றும் வழிநடத்தல் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. மேலும், தேசிய தேர்ச்சித் தரங்களை அபிவிருத்தி செய்வதற்காக அதன் மேற்பார்வைக் குழு கூடி தேர்ச்சித் தரங்களின் முன்னேற்றத்தையும் மதிப்பாய்வு செய்தது. மீளாய்வாண்டின் முடிவின் போது கணிப்பீட்டாளர் பதிவுக்களரியில் 4477 கணிப்பீட்டாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதிக்கான அறிவுசார் கணிப்பீடுகளில் 52,579 பேர் தோற்றினர். 15 வெவ்வேறு தொழில்களின் NVQ மட்டம் 4 இற்காக நடாத்தப்படும் பொது எழுத்துமூல அறிவுசார் கணிப்பீட்டிற்குப் பதிலாக , நிகழ்நிலை (ஆன்லைன்) முறை மூலம் சம்பந்தப்பட்ட தேர்வுகளை நடாத்துவதற்கான பூர்வாங்க பணிகள் 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. மீளாய்வாண்டில் 117,178 தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ்கள் (NVQ) வழங்கப்பட்டதுடன் 756 NVQ சான்றிதழ்தாரர்களுக்கு "ஸ்கில்ஸ் பாஸ்போர்ட்" அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

மீளாய்வாண்டில் ஆறு (06) தொழிற்துறை திறன்கள் சபை மற்றும் இரண்டு (02) ஆலோசனை செயற்குழு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புப் பணிகளும் பயனுள்ள வகையில் செயற்படுத்தப்பட்டதுடன் 15 தொழில் வழிகாட்டல் நிலையங்களும் பதிவு செய்யப்பட்டன.

TVET துறையின் பிரதான தர உத்தரவாத முறைமையை நடைமுறைப்படுத்துகையில் சுமார் 35% பணியாளர் வெற்றிடத்துடனும் மற்றும் குறைந்தபட்ச நிதியின் கீழ் உயர் செயல்திறனை அடைவது மிகவும் சவாலான சூழ்நிலைமையாக மீளாய்வாண்டு இருந்தது. இருப்பினும், இந்த சவாலை சமாளிக்க, எனது பணியாளர்கள் தகவல் அமைப்பு முறைமைகளை செவ்வனே கையாண்டு மற்றும் சம்பந்தப்பட்ட வெளித் தரப்பினரின் பங்களிப்புடன் இலக்குகளை அடைந்ததையிட்டு அவர்களை மிகவும் பாராட்டுகின்றேன். மேலும் TVET இன் உயர் தர உத்தரவாதத்தைப் பேணுவதற்கு இவர்களின் பங்களிப்பு பெரிதும் உதவியது என்று நான் நம்புகிறேன்.

**கலாநிதி திரு. கே.ஏ.லலிததீர**
**பணிப்பாளர் நாயகம்**

## இடர் மதிப்பீடு மற்றும் தடுப்பு உத்திகள்

TVET இல் தர உத்தரவாதத்தைப் பேணுவதில் ஆணைக்குழு எதிர்கொள்ளும் அரசியல், பொருளாதார, சமூக, தொழில்நுட்ப, சுற்றுச்சூழல் மற்றும் சட்டக் காரணிகளைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழுவுக்கு ஏற்படும் இடர்களைக் கண்டறிந்து அந்த இடர்களைத் தடுக்கத் தேவையான உத்திகளைத் தீர்மானிக்க ஆணைக்குழு SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்துகிறது.

## SWOT பகுப்பாய்வு



## மூலோபாயங்கள்

- சட்டத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேவையான திருத்தங்களைச் செய்தல்
- புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தகவல் முறைமைகளை தன்னியக்கமாக்கல் (Automation)
- பொதுமக்கள் பிரச்சாரங்களை மேம்படுத்துவதற்காக தேவையான அலுவல்களை மேற்கொள்ளல்
- உயர் தர உத்தரவாத முறைமையை உருவாக்குவதற்குத் தேவைப்படும் கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- சர்வதேச உறவுகளை மேம்படுத்துவதற்காக அலுவல்களை மேற்கொள்ளல்

## நிதி மற்றும் தொழிற்படு செயல்திறன்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுக்குழுவுக்கு பொதுத் திறைசேரியால் நிதியொதுக்கங்கள் வழங்கப்படுகிறது. இது தவிர, ஆணைக்குழு ஈட்டும் வருமானம் மற்றும் பிற உள்ளூர்/வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கும் மானியங்கள் மூலம் கிடைக்கும் நிதியுதவி செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்த நிதி ஒதுக்கீடுகளின் உதவியுடன் நான்கு (04) தொழிற்படு பிரிவுகளும் மற்றும் அப்பிரிவுகளின் அலுவல்களுக்கு உதவியான மேலும் ஆறு (06) துணைப் பிரிவுகளின் பங்கேற்புடன் ஆணைக்குழுவின் குறிக்கோள்களை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.



## நிதிநிலை செயற்திறன்

2024 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் மீள்வருஞ் செலவினம் ரூ.282 மில்லியன் மற்றும் மூலதனச் செலவு ரூ.17.24 மில்லியன் ஆக மொத்தமாக ரூ.299.24 மில்லியன் செலவாக ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாண்டில் திறைசேரி மீள் செலவினங்களுக்காக 196.35 மில்லியன் ரூபாவையும், மூலதனச் செலவுக்காக 14.2 மில்லியன் ரூபாவையும் ஆணைக்குழுவிற்கு விடுவித்திருந்தது.

### மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் திறைசேரி விடுவித்த தொகை (ரூ. மில்லியன்)

| விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ. மில்லியன்) | திறைசேரி விடுவித்த தொகை (ரூ. மில்லியன்) | வருமானத்தில் செலவழிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| மீள்வரும் செலவு | 230.000 | 196.350 | 89.65 |
| மூலதனச் செலவு | 21.000 | 14.200 | |




### 2024 இல் சேவைகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்

| சேவை வகை | மதிப்பிடப்பட்ட வருமானம் (ரூ. மில்லியன்) | உண்மையான வருமானம் (ரூ. மில்லியன்) |
|---|---|---|
| நிறுவன பதிவுக் கட்டணம் | 4.500 | 8.170 |
| பாடநெறி தராதர அங்கீகாரக் கட்டணம் | 2.425 | 5.258 |
| NVQ சான்றிதழ் அச்சடிப்புக் கட்டணம் | 18.450 | 57.433 |
| NVQ சமானப்படுத்தல் (மேப்பிங்) கட்டணம் | 0.100 | 1.377 |
| NVQ சான்றிதழ் உறுதிப்படுத்தல் கட்டணம் | 2.500 | 1.973 |
| NVQ பரீட்சைக் கட்டணம் | 28.000 | 39.289 |
| ஸ்கில்ஸ் பாஸ்போர்ட் கட்டணம் | 0.825 | 1.161 |
| மாணவர் தேர்ச்சி பதிவுப் புத்தக விற்பனை | 12.000 | 19.062 |
| கணிப்பீட்டுக் கட்டணம் மற்றும் கணிப்பீட்டு சீருடை | 1.100 | 1.389 |
| QMS சான்றளிப்புக் கட்டணம் | 0.100 | 0.625 |
| மொத்த வருமானம் | 70.000 | 135.737 |

## நிதிப் பகுப்பாய்வு 2014- 2024 (ரூ. மில்லியன்)

| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெறுகை | 118.45 | 127.516 | 168.629 | 198.644 | 234.263 | 222.693 | 193.478 | 184.59 | 234.886 | 295.072 | 382.8 |
| மூலதனச் செலவு | 15.11 | 9.42 | 12.24 | 14.35 | 8.18 | 8.6 | 5.01 | 7.06 | 7.49 | 7.67 | 17.247 |
| மீள்வருஞ் செலவு | 77.89 | 91.52 | 120.8 | 124.31 | 142.72 | 163.09 | 138.33 | 167.04 | 202.3 | 261.276 | 282.61 |
| செயற்திட்டச் செலவு | 26.191 | 27.526 | 42.166 | 49.797 | 54.068 | 40.188 | 29.061 | 18.978 | 8.955 | 15.06 | 17.381 |
| மேலதிகம்/ (போதாமை) | -0.741 | -0.95 | -6.577 | 10.187 | 29.295 | 10.815 | 21.077 | -8.488 | 16.141 | 11.066 | 65.562 |
| தேறிய நிலையான சொத்துக்கள் | 46.246 | 35.772 | 34.88 | 34.567 | 29.296 | 27.087 | 19.472 | 16.717 | 105.635 | 89.033 | 73.707 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 20.938 | 20.725 | 31.84 | 38.935 | 65.458 | 84.688 | 108.423 | 108.756 | 128.952 | 162.172 | 264.42 |
| உரிமம் | 0.801 | -1.141 | 0.474 | 14.975 | 37.311 | 52.841 | 73.222 | 65.563 | 81.512 | 211.489 | 272.31 |
| ஒதுக்கம் | 9.614 | 12.985 | 11.968 | 13.71 | 16.757 | 20.582 | 24.957 | 25.748 | 26.859 | 27.621 | 33.86 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 10.522 | 8.881 | 19.397 | 10.25 | 11.389 | 11.264 | 10.244 | 17.444 | 20.581 | 12.094 | 31.94 |

## செயல்பாட்டு செயல்திறன்

### திட்டங்களை வகுத்தல்

இலங்கையின் பொருளாதார மற்றும் மனித வள அபிவிருத்தித் தேவைகளுக்கு ஏற்ப மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆராய்ச்சியைத் நடாத்துதல், திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல், தேசிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் தொழிற் சந்தை தகவல் அறிக்கைகளை தயாரித்து வெளியிடுதல் ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறையின் ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக இவ்வாணைக்குழு செயற்படுகிறது.

### தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் ஆராய்ச்சி கற்கைகளை செயற்படுத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் தாபிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி வட்டம் (Research Cell) TVET துறையில் ஆய்வுகளை மேற்கொள்கிறது. TVET துறையில் உள்ள பல்வேறு நிறுவனங்களின் அலுவலர்களால் ஆய்வுக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 2005 இல் தொடங்கப்பட்ட ஆராய்ச்சி வட்டமானது ஆராய்ச்சி நடவடிக்கைகளை வழிநடத்துவதுடன் மற்றும் ஆராய்ச்சி ஆய்வுகளின் தரத்தை பேணவும் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறது. ஆராய்ச்சி ஆய்வுகள் பற்றிய விபரங்கள் TVEC இணையதளத்தில் (www.tvec.gov.lk) வெளியிடப்பட்டுள்ளன.

### புதிய ஆராய்ச்சி கற்கைகள் – 2024

2023 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட நான்கு (04)ஆராய்ச்சி கற்கைகளில் மூன்று (03) அறிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதுடன் மற்ற அறிக்கை முடிக்கப்பட்டு மேற்பார்வையாளரின் மதிப்பீட்டிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2024 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கைகள் பின்வருமாறு.

1. TVEC NVQ மட்டம் 5 இற்கு சமமான விருது செயல்முறையில் அதிக தேர்வுநாடிகள் கைவிடுவது பற்றிய ஆய்வு.

2. வெளியூர் தொழிற்சந்தையில் கவனிப்பாளர் வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கு NVQ சான்றிதழ் பெற்ற இலங்கையர்களைப் பாதிக்கும் காரணிகள்

3. இணைய அடிப்படையிலான NVQ முறைமையின் பயன்பாட்டினைப் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிவது பற்றிய ஆய்வு

### மேற்பார்வை மட்டத்தில் உள்ள அறிக்கை

1. TVET துறையில் திறன் இடம்பெயர்வின் (Skills Migration) தற்போதைய போக்கின் தாக்கம் பற்றிய ஆய்வு.

TVEC இன் 2024 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி கற்கைகளுக்காகப் பெறப்பட்ட முன்மொழிவுகளில் மூன்று (03) முன்மொழிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் “உள்ளூர் மீனவ சமூகத்தினருக்கான நீலப் பொருளாதாரத் துறையில் மாற்று வாழ்வாதாரங்களைக் கண்டறிந்து (Blue Economy) மீன்வளங்களை அதிகமாகச் சுரண்டுவதைக் குறைத்தும் வழிகளுக்கான தொழில் பயிற்சி” பற்றி ஆராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறைக்கான தேசிய அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்

தேசிய TVET அபிவிருத்தி திட்டம் கௌரவ ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அதன் கொள்கைக் கட்டமைப்பில் திருத்தங்களைச் செய்வதில், தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பை செயல்படுத்துவது தொடர்பாக, அமைச்சரவை துணைக் குழு மற்றும் மேற்பார்வைக் குழு மூலம் தொழிற்கல்வி மற்றும் திறன் கல்வித் துறையில் முன்மொழியப்பட்ட நிர்வாக மற்றும் சட்ட மாற்றங்கள், தேசியக் கல்வித் திட்டத்திற்கு ஏற்ப திறன் கல்வித் துறையின் வளர்ச்சி தொடர்பான கொள்கைப் பரிந்துரைகள் அல்லது சூழல் மற்றும் இலக்கு அமைப்பில் இது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதால், முன்மொழியப்பட்ட நிறுவன மற்றும் கொள்கை கட்டமைப்பை நிறுவிய பின், அதற்கேற்ப திட்டத்தை மாற்றியமைப்பது பொருத்தமானதென ஜனாதிபதி செயலகத்தால் அமைச்சிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்கள் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

### மேல் மாகாணத்திற்கான VET திட்டம்

கடந்த 2013-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அபிவிருத்திப் பணிகள், பணிச்சுமை மற்றும் அதன் சிக்கல்தன்மை காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. எவ்வாறாயினும், இவ் அபிவிருத்திப் பணிகள் 2022 ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2022 டிசம்பரில் அதிகாரப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு தொழில்தருநர் கணக்கெடுப்புக்காக பின்வரும் நான்கு துறைகளை உள்ளடக்கிய TVECயின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் ஆய்வை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

- ICT
- கட்டுமானம்
- ஹோட்டல் மற்றும் சுற்றுலா
- உற்பத்தி

2023 மற்றும் 2024 இல் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட போதிலும், தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் அறிக்கை எழுதுதல் ஆகியவற்றை திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் பூர்த்திசெய்ய முடிந்தது.

VET திட்டத்தின் இறுதி சரிபார்ப்புக்கு முன்னர் மேல் மாகாண சபையின் அதிகாரிகளுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

வலிதாக்க செயலமர்வு 2024 நவம்பர் 26 அன்று மேல் மாகாண ஆளுநர் தலைமையில் மாகாணத்தில் உள்ள பங்குதாரர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இந்த அறிக்கை ஆளுநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டதுடன், மாகாணத்தின் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாண வழிநடத்தல் குழுவொன்று 2025 ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

## தொழிற்துறை VET திட்டங்கள்

மீளாய்வாண்டில் பின்வரும் VET திட்டங்களை தயாரிக்க திட்டமிடப்பட்டது.

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (புதியது)
- ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத் துறை (இற்றைப்படுத்தல்)
- தொழில்தருநர் கணக்கெடுப்பை நடாத்துவதற்கு வினாக்கொத்துகள் தயாரிக்கப்பட்டு மின்னஞ்சல் மூலம் விநியோகிக்கப்பட்டன, மேலும் மின்னஞ்சல் மூலம் நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டன. அதன்படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு 31 பதில்களும், ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்துறைக்கு ஒரே ஒரு பதில் மட்டுமே கிடைத்தது.

மேலும், இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு மற்றும் இலக்கிய ஆய்வு ஆகியவை இரண்டு துறைகளுக்கும் நடாத்தப்பட்டது.

கிடைக்கப்பெற்ற பதில்களுடன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாவுக்கு கிட்டத்தட்ட எந்த பதிலும் இல்லாததால், ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த சபை பிரதிநிதிகளும் VET திட்டத்தை உருவாக்க பேச்சுவார்த்தையும் நடாத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக எவ்வித செலவும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது**.**

## தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்




மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இலங்கையில் தற்போதைய தொழில் தேவை மற்றும் பிற தொழிற்சந்தை தகவல்களை வழங்கும் நோக்கத்துடன் தொழிற்சந்தை தகவல் முறைமையை நிறுவியுள்ளது. தரவு கணக்கெடுப்பு மற்றும் பகுப்பாய்விலிருந்து பெறப்படும் தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழிகாட்டுநர்கள், வேலைவாய்ப்பு முகவர்கள், பயிற்சியாளர்கள்,தொழில்தருநர்கள் மற்றும் தொழில் நாடுவோர்கள் போன்றவர்களின் நலனுக்காக தொழிற்சந்தை தகவல் பருவ இதழாக வெளியிடப்பட்டுள்ளது (www.tvec.gov.lk LMI Bulletin).

## தொழிற்சந்தை தகவல் பருவவெளியீடு - 2024

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிக்கு பிரிவு 2024 ஆம் ஆண்டில் இரண்டு (02) தொழிற் சந்தை தகவல் பருவவெளியீடுகளை வெளியிட முடிந்தது. இந்த வெளியீடுகள் 2023 இன் முழுவதும் 2024 இன் முதல் அரையாண்டில் இலங்கையின் தொழிற்சந்தையின் தன்மையை வெளிப்படையாக பகுப்பாய்வு செய்து முன்வைக்க முடிந்தது.

தொழிற்சந்தை தகவல் பருவவெளியீடு பின்வரும் ஐந்து (05) பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. வேலைகளுக்கான தேவை
2. வேலைவாய்ப்பு
3. வேலைவாய்ப்பின்மை

4. 4.தொழிற்சந்தை வழங்கல், அதாவது பல்வேறு வேலைகளுக்கான தொழில் வழங்கல்
5. தொழிற்சந்தைக்கான தேவை மற்றும் ஆராய்ச்சி பற்றிய தகவல்

**2024 ஆம் ஆண்டில் தொழிற்சந்தை தகவல் பருவவெளியீட்டின் தரத்தை** மேம்படுத்த திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு அலுவல்களை மேற்கொண்டது.

அதன்படி, தொழிற்சந்தை தகவல் வெளியீட்டிற்கு புதிய பார்வையைக் கொடுப்பது, தொழிற்சந்தை தொடர்பான ஆய்வுகள் மற்றும் தொழில் பற்றிய தகவல்கள், தொழிற்சந்தை போக்குகளின் விசேடமாக ஆர்வமுள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் வகையில், இந்த வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

தொழிற்சந்தை தகவல் வெளியீட்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைக்கான தேவை, உள்ளூர் மற்றும் வெளியூர் அடிப்படையிலான செய்தித்தாள் வேலைவாய்ப்பு விளம்பரங்களின் படி ஒவ்வொரு தொழில் துறையிலும் வேலை வாய்ப்புகள், வேலைவாய்ப்புக்கமர்த்தல், கல்வித் தகுதிகள், பெண்/ஆண் நிலை மற்றும் அனுபவம் போன்ற வேலை தொடர்பான தகவல்கள் உள்ளன.

2006 முதல் 2016 வரை ஒவ்வொரு வருடமும் "சிலுமின" மற்றும் "சண்டே ஒப்சேர்வர்" பத்திரிகைகளிலிருந்து கணக்கெடுக்கப்பட்ட விளம்பரங்களின் எண்ணிக்கையை அட்டவணை காட்டுகிறத. 2017 முதல் 2023 வரை "லங்காதீப" மற்றும் "சண்டே ஒப்சேர்வர்" பத்திரிகைகளிலிருந்து கணக்கெடுக்கப்பட்டது.

| வருடம் | வேலைவாய்ப்பு தொடர்பான விளம்பரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 104,839 |
| 2007 | 113,060 |
| 2008 | 116,157 |
| 2009 | 82,167 |
| 2010 | 124,741 |
| 2011 | 108,193 |
| 2012 | 136,994 |
| 2013 | 107,698 |
| 2014 | 91,430 |
| 2015 | 81,369 |
| 2016 | 74,245 |
| 2017* | 226,555 |
| 2018 | 215,991 |
| 2019 | 160,933 |
| 2020 | 123,003 |
| 2021 | 144,157 |
| 2022 | 115,463 |
| 2023 | 102,501 |




**அட்டவணை 8.1 - தொகுக்கப்பட்ட வேலை விளம்பரங்களின் எண்ணிக்கை**

## தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள்

தொழிற்கல்விப் பயிற்சித் திட்டங்களின்படி இனங்காணப்பட்ட தொழிற்துறைகளில் தொழில் தேவை மற்றும் வழங்கலுக்கு ஏற்ப தேசிய தொழிற்திறன் தகுதி கட்டமைப்பை செயல்படுத்துவதற்காகஇ தொழில்கள் தொடர்பான தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் தேர்ச்சிசார் பாடவிதானங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதற்கமைய. புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன

## அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் - 2024

**மட்டம் 01 – 04**

1. உக்காத திடக் கழிவு முன் செயலாக்குபவர் (Non-Bio Degradable Solid Waste Pre Processor - NVQ Level 3)
2. சுகாதாரத்துறை உதவியாளர் (கதிரிக்கவியல்) (Healthcare Assistant (Radiology) - NVQ Level 3)
3. இரத்தினவியல் உதவியாளர் (Gemological Assistant - NVQ Level 3)
4. பத்திரிகையாளர் (Journalist - NVQ Level 3 & 4)
5. ஏரோபிக்ஸ் உடற்தகுதி பயிற்றுவிப்பாளர் (Aerobics Fitness Instructor - NVQ Level 3 and 4)
6. மனித வள இணைவர் (Human Resources Associate- NVQ Level 4)
7. டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பயிற்சியாளர் (Digital Marketing Practitioner - NVQ Level 4)
8. வாகன ஓட்டுதல் பயிற்றுவிப்பாளர் (Driving Instructor - NVQ Level 4)
9. கேட்பொலி தொழில்நுட்பவியலாளர் (Audio Technician - NVQ Level 4)
10. நீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய தொழிற்பாட்டு தொழில்நுட்பவியலாளர் (Water and Wastewater Treatment Plant Operation Technician - NVQ Level 4)
11. உயிர்வாயு தொழில்நுட்பவியலாளர் (Biomass Technician - NVQ Level 4)
12. நீர்மின் நிலைய தொழில்நுட்பவியலாளர் (Hydropower Plant Technician - NVQ Level 4)
13. ஆளில்லா விமான அமைப்பு/ட்ரோன் விமானி (Unmanned Aircraft System/Drone Pilot - NVQ Level 4)
14. இருதயக் கவனிப்பு தொழில்நுட்பவியலாளர் (Cardiac Care Technician- NVQ Level 4)
15. தேனீ வளர்ப்பவர் (Bee Keeper - NVQ Level 4)
16. பொருள் மீட்பு வசதி தொழிற்பாட்டு உதவியாளர் (Material Recovery Facility Operations Assistant- NVQ Level 4)

**மட்டம் 05 - 06**

1. கணினி முறைமை வடிவமைப்பு (Computer System Design – NVQ Level 5)
2. கைத்தொழில் பொறியியல் தொழில்நுட்பம் (Industrial Engineering Technology - NVQ Level 5)
3. பல்மருத்துவ அலுவலக முகாமைத்துவம் (Dental Office Management –NVQ Level 5)
4. சூழலியல் விவசாயம் (Ecological Agriculture- NVQ Level 5)
5. கூட்டுறவு நிதிச் சேவை முகாமைத்துவம் (Cooperative Financial Service Management -- NVQ Level 5)
6. விலங்கு வெளியிட வளங்காப்பு மற்றும் முகாமைத்துவம் (Animal Ex-Situ Conservation and Management – NVQ Level 5 and 6)
7. நிர்மாண இடர் முகாமைத்துவம் (Construction Risk Management - NVQ Level 6)

## தேசிய தேர்ச்சித் தரங்கள் மட்டும் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்கள்

1. தபால் உதவியாளர் (Postal Assistant - NVQ Level 3)
2. புல் ஸ்டக் மென்பொருள் அபிவிருத்தியாளர் (Full Stack Software Developer - NVQ Level 5 & 6)
3. வங்கியல் மற்றும் நிதி (Banking & Finance- NVQ Level 5 & 6)

## பாடவிதானங்கள் மட்டும் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்கள்

1. புடவை மற்றும் ஆடை உற்பத்தி தொழில்நுட்பம் (Textile and Apparel Manufacturing Technology – NVQ Level 5)

## இற்றைப்படுத்தப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் – 2024

**மட்டம் 01 -04**

1. தொழிற்துறைசார் தையல் இயந்திரம் இயக்குபவர் (Industrial Sewing Machine Operator - NVQ Level 2 & 3)
2. உணவு மற்றும் பான இணைவர் (Food & Beverage Associate – NVQ Level 2, 3 and 4)
3. நீர்க்குழாய் பொருத்துபவர் (Plumber-NVQ Level 2, 3 and 4)
4. காய்ச்சி இணைப்பவர் (Welder– NVQ Level 2, 3 and 4)
5. செல்லிடைப் பேசி பழுதுபார்ப்பு தொழில்நுட்பவியலாளர் (Mobile Phone Repairing Technician - NVQ Level 3 and 4)
6. டீசல் என்ஜின் தொழில்நுட்பவியலாளர் (Diesel Engine Technician - NVQ Level 3 and 4)

7. குளிரூட்டிக் கப்பல் கொள்கலன் தொழில்நுட்பவியலாளர் (Reefer Container Technician - NVQ Level 3 and 4)
8. மணப்பெண் அலங்கரிப்பவர் (Bridal Dresser - NVQ Level 3 and 4)
9. திரை அச்சிடுபவர் (Screen Printer - NVQ Level 3 and 4)
10. தொழிற்த்துறை எந்திரமின்னணு தொழில்நுட்பவியலாளர் (Industrial Mechatronic Technician- NVQ Level 4)
11. பராமரிப்பாளர் (Care Giver - NVQ Level 3 and 4)
12. அச்சு முடிப்பாளர் (Print Finisher - NVQ Level 3 & 4)
13. மோட்டார் வாகன ஒட்டுவேலை வினைஞர் (Automobile Tinker - NVQ Level 3 & 4)
14. மோட்டார் வாகன குளிரூட்டி மற்றும் வளிசீராக்கல் தொழில்நுட்பவியலாளர் (Automobile Ref & AC Technician - NVQ Level 3 & 4)
15. பால் பண்ணை உதவியாளர் (Dairy Farming Assistant - NVQ Level 3 & 4)
16. கட்டிட தீந்தை பூசும் வினைஞர் (Building Painting Technician - NVQ Level 3 & 4)
17. றிகர் (Rigger - NVQ Level 3 & 4)
18. பொருள் மீட்பு வசதி மேற்பார்வையாளர் (Material Recovery Facility Supervisor– NVQ Level 4)
19. கணிய அளவீட்டு உதவியாளர் (Quantity Surveying Assistant - NVQ Level 4)
20. உற்பத்தி மேற்பார்வையாளர் (தையல்)(Production Supervisor (Sewing)-NVQ Level 4)

**மட்டம் 05 -06**

1. நிர்மாண உபகரண பராமரிப்புத் தொழில்நுட்பம் (Construction Equipment Maintenance Technology - NVQ Level 5 and 6)
2. புதுப்பித்தக்க வலுச்சக்தி தொழில்நுட்பம் (Renewable Energy Technology - NVQ Level 5 and 6)

## புதிய தேர்ச்சித் தரங்கள் வெளியீடு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

புதிய தேசிய தேர்ச்சித் தரங்களை தயாரித்து ஏற்கனவே உள்ள தேசிய தேர்ச்சித் தரங்களைப் புதுப்பித்த பிறகு, அது குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவிக்க நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில் அவ்வாறான இரண்டு (02) நிகழ்ச்சிகள் பின்வரும் நிறுவனங்களுக்கு நடாத்தப்பட்டன.

- சுகாதாரத் துறை
- குளிரூட்டல் மற்றும் வளிசீராக்கல் துறை

## நிறுவனங்களுக்கு இடையேயான தேசிய தொழிற்திறன் தகுதி வழிநடத்தல் குழுக் (NVQ Steering Committee) கூட்டங்களை நடாத்துதல்

தேசிய தொழிற்திறன் தகுதி முறைமையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கு தீர்வு காணவும் மற்றும் புதுமைகளை நடைமுறைப்படுத்தவும் தேசிய தொழிற்திறன் தகுதி முறைமையை நடைமுறைப்படுத்தும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட வழிநடத்தல் குழுவொன்று (Steering Committee) நிறுவப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் ஒரு கொள்கை வழிநடத்தல் குழு கூட்டமும் ஆறு (06) தொழிற்படு வழிநடத்தல் குழுக் கூட்டங்களும் நடைபெற்றன.

## தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை குழு

தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு குழுவானது தேசிய தேர்ச்சித் தரங்களை மேம்படுத்தவும், உள்ளூர் மற்றும் வெளியூர் தொழிற்சந்தையின் தேவையை கருத்திற் கொண்டு அனுமதி வழங்கவும் தேசிய தேர்ச்சித் தரங்களின் தரத்தன்மையப் பேணவும், தேசிய தேர்ச்சி தரங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை தயாரிப்பதில் எழும் சிக்கல்களைத் தீர்க்கவும் தாபிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில், மேற்கூறிய குழுவின் தொடர்புடைய முடிவெடுத்தல் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்வதற்காக ஏழு (07) கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## பயிற்சி நிறுவனங்களுக்கான தர உத்தரவாத நடைமுறைகள் கடைபிடிப்பு

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டம் மற்றும் பயிற்சி நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான அபிவிருத்தித் திட்டம் (அதிவிசேட வர்த்தமானி இல. 887/8 செப்தெம்பர் 7, 1995) என்பவற்றின் பிரகாரம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு நான்கு (04) கட்ட தர உத்தரவாத முறையை பின்பற்றுகிறது. அவையாவன,

- ✓ தொழிற் பயிற்சி நிறுவன பதிவு
- ✓ பாடநெறி தராதர அங்கீகாரம

- ✓ தர முகாமைத்துவ முறைமை நிறுவல் மற்று சான்றளிப்பு
- ✓ தர மேம்பாட்டு முறைமையை (QIS) நிறுவுதல்

## தொழிற் பயிற்சி நிறுவன பதிவு

தொழிற்பயிற்சி அளிக்கும் பயிற்சி நிறுவனங்கள் இவ் ஆணைக்குழுவின் கீழ் நிறுவனப் பதிவைப் பெறுவது சட்டப்பூர்வமான தேவையாகும். அதன்படி, நாட்டில் இயங்கும் அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களும்/ நிறுவனங்களும் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மேற்கூறிய சட்டத்தின்படி, பதிவு செய்வதற்கான மதிப்பீட்டின்போது பயிற்சிக்காக வழங்கப்பட்ட ஆவணங்கள், சான்றுகள் மற்றும் முறைகள், பௌதீக மற்றும் மனித வளங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தொடர்புடைய அளவுகோல்களுக்கமையஃ பிரமாணங்களுக்கமைய பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் ஆணைக்குழு இரண்டு ஆண்டு கால பதிவை நிறுவனங்களுக்கு வழங்கும். 2024 ஆம் ஆண்டின் இறுதியில், 1,696 தொழிற்பயிற்சி நிலையங்களின் பதிவு செல்லுபடியாக இருந்ததுடன், அவற்றில் 649 அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ சபைகளுக்கு உரிமையானதுடன் மற்றும் 1047 தனியார்/ அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உரிமையானவை.

**2024**

ஆம் ஆண்டு செயல் திட்டத்தின் படி, 850 நிறுவனங்களை பதிவு செய்ய இலக்கு வைத்திருப்பினும் முந்தைய விண்ணப்பங்களுடன் சுமார் 1205 நிறுவனங்களை இவ் ஆணைக்குழு மதிப்பீடு செய்தது.

வகைப்பாட்டின் படி பயிற்சி நிறுவனப் பதிவு 2024க்கான மதிப்பீடுகள் (புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவு**)**

| **மதிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை** | **மதிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|
| | **புதிய பதிவு** | **பதிவு புதுப்பிப்பு** | **மொத்தம்** |
| இலக்கு | 350 | 500 | 850 |
| பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 570 | 655 | 1225 |
| மதிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை | 518 | 687 | 1205 |

## பதிவு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களின் பதிவுகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குதல்

வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சியளிக்கப்பட்ட சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களின் பதிவை உறுதிப்படுத்தும் வகையில் வெளிவிவகார அமைச்சுக்கு கடிதங்கள் வழங்கப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில் இது போன்ற சுமார் 1,857 கடிதங்கள் வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவனங்கள் உரிமம் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டன.

| **உரிமம்** | **பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|
| | **புதிய பதிவு** | **பதிவு புதுப்பிப்பு** | **மொத்தம்** |
| அரச | 43 | 271 | 314 |
| தனியார் | 237 | 330 | 567 |
| மொத்தம் | 280 | 601 | 881 |

## பாடநெறி தராதர அங்கீகாரம்

தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறு 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏதேனும் தொழிலுக்கான NVQ தகுதிகளை வழங்க தேசிய தேர்ச்சித் தரம் தயாரிக்கப்பட வேண்டும். தேர்ச்சி தரங்களுக்கு ஏற்ப தேசிய பாடவிதானங்கள் தயாரிக்கப்படுவதுடன், தேர்ச்சிசார் பயிற்சியின் கீழ் நடாத்தப்படும் பாடநெறிகளின் தராதர அங்கீகாரம் இவ் ஆணைக்குழுவால் வழங்கப்படுகிறது**.**

**2024**

2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறி தராதர அங்கீகார கணிப்பீடுகளின் எண்ணிக்கை பின்வருமாறு. தராதர அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள் மூலம் பயிற்சி பெறும் மாணவர்களின் இறுதிக் கணிப்பீட்டை இவ் ஆணைக்குழு நடாத்தப்படுவதுடன் பெறுபேறுகளின் அடிப்படையில் NVQ தகுதி வழங்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில் இவ் ஆணைக்குழுவால் தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கை 1469 ஆவதுடன் நிறுவனங்களின் உரிமத்தின் அடிப்படையில் அவை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

| கணிப்பீடுகளின் எண்ணிக்கை | பாடநெறி தராதர அங்கீகார கணிப்பீட்டு எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | புதிய அங்கீகாரம் | அங்கீகாரம் புதுப்பிப்பு | மொத்தம் |
| இலக்கு | 300 | 800 | 1100 |
| கணிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை | 777 | 728 | 1505 |

| உரிமம் | தராதரமளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | புதிய பாடநெறி | புதுப்பிக்கப்பட்ட பாடநெறி | மொத்தம் |
| அரச | 366 | 600 | 966 |
| தனியார் | 362 | 141 | 503 |
| மொத்தம் | 728 | 741 | 1469 |

## தர முகாமைத்துவ முறைமை நிறுவல் மற்று சான்றளிப்பு

எந்தவொரு பயிற்சி நிறுவனமும் வழங்கும் சேவையை உயர் தரத்தில் செயல்படுத்த நிறுவனமானது தர முகாமைத்துவ முறைமையை நிறுவி அதனை கொண்டு நடாத்திச் செல்ல எதிர்பார்க்கப்படுகிறது. தரத்தைப் பேணும் நோக்கத்துடன் பயிற்சி நிறுவனங்களில் தர முகாமைத்துவ முறைமையொன்றை மூன்றாம் நிலைகல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முறைமையானது ISO 9001:2008 மற்றும் IWA 2/ 2007 ஆகிய தர நிர்ணயங்களுக்கமைவாக செயற்படுத்தப்படுகிறது. பாடநெறி தராதர அங்கீகாரத்துக்கு மேலதிகமாக தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 05 மற்றும் 06 பாடநெறிகளைத் தொடங்கும் அனைத்து நிறுவனங்களும் இத் தர முகாமைத்துவ முறைமையை நிறுவ வேண்டும்.

**2024**

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டின் நிலைமை மற்றும் சமூகப் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட வளப்பற்றாக்குறை மற்றும் பயிற்றுவிப்புப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் இருந்த சிரமம் போன்ற பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தொழில் பயிற்சி நிறுவனங்களில் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கான கணக்காய்வுகள் நடத்தப்படவில்லை.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் இரண்டு நிறுவனங்களின் வேண்டுகோளிற்கிணங்க இரண்டு கணக்காய்வுகள் நடாத்தப்பட்டன.

## தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) விருதளித்தல்

தரக் கட்டுப்பாட்டு முறையொன்றாக தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் தரத்தைப் பாதுகாக்க உதவும் முறைமைகளை அபிவிருத்தி செய்து பராமரித்து தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல்கள் மூலம் மிக உயர்ந்த தரத்தில் தேசிய தொழிற்திறன் தகுதி விருதளித்தல் இடம்பெறுகிறது.

இங்கு, தேர்வுநாடிகள் நான்கு (04) முக்கிய முறைகளின் கீழ் கணிப்பீடு செய்யப்படுவார்கள்.

- ✓ தேர்ச்சிசார் பயிற்சி (CBT)

- ✓ முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (RPL)
- ✓ நிறுவனசார் பயிற்சி (பயிலுநர்கள்) (EBT)
- ✓ நெகிழ்வான கற்றல் முறை (தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள்) (FLM)

மேற்குறிப்பிட்ட முறையின் கீழ் தோற்றும் தேர்வுநாடிகளின் தேர்ச்சி பற்றிய கணிப்பீடு தேசிய தொழிற்திறன் தகுதி முறைமையின் படி மூன்று பிரதான வழிகளில் கணிப்பீடு மேற்கொள்ளப்படும்.

- ✓ அறிவுசார் கணிப்பீடு (Knowledge Assessment)
- ✓ செய்முறை கணிப்பீடு (Practical Assessment)
- ✓ நேர்முகத் தேர்வு (Viva Voce)

## தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 4 ஐ விருதளிப்பதற்கான பொது அறிவுசார் கணிப்பீட்டை நடாத்துதல்

2024 ஆம் ஆண்டில், 17 தொழில்களுக்கான தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 04 இற்கு நடாத்தப்பட்ட பொது அறிவுசார் கணிப்பீடு பற்றிய விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டில் மூன்று எழுத்துமூல அறிவுசார் கணிப்பீடுகள் நடாத்தப்பட்டதுடன் 2024 ஒக்டோபர் மாதம் முதல் நிகழ்நிலை அறிவுசார் கணிப்பீடு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 821 தேர்வுநாடிகளுக்காக நிகழ்நிலை அறிவுசார் கணிப்பீடுகள் நடாத்தப்பட்டன.

**தொழில் தகுதி அறிவுசார் கணிப்பீடு - 2024**

| அறிவுசார் | சித்தியடைந்தவர்கள் | சித்தியடையாதவர்கள் | சமூகமளிக்காதவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2024-01 | 371 | 91 | 252 | 714 |
| 2024-02 | 14,233 | 4,315 | 3,370 | 21,918 |
| 2024-09 | 17,699 | 6,652 | 4,775 | 29,126 |
| நிகழ்நிலை | 704 | 76 | 41 | 821 |

## தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 05 மற்றும் 06 இற்கான எழுத்துமூல பரீட்சை நடாத்துதல்

தனியார் துறையில் தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 மற்றும் 6 ஆகிய பாடநெறிகளுக்கான எழுத்துத் தேர்வுகளை அந்த பாடநெறிகளின் தராதர அங்கீகாரம் பெற்ற அதே பயிற்சி நிறுவனத்தில் நடாத்தவும் அதற்கான அனுமதியை ஆணைக்குழுவிடம் கோருவதன் அடிப்படையில் எழுத்துமூல பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன.

மேலும், அரச துறையிலே தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 மற்றும் 6 பாடநெறிகளின் எழுத்துமூல பரீட்சைகள் அந்தந்த பயிற்சி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்றன.

**2024**

தனியார் துறையில் தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 மற்றும் 6 பாடநெறிகளின் பொது எழுத்துமூல பரீட்சை தொடர்புடைய நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் 2024 இல் நடாத்தப்பட்டது. பின்வரும் துறைகளுக்கு 38 பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
2. கணிய அளவீடு
3. கட்டுமான தொழில்நுட்பம்
4. எழிலியல்/அழகியல்
5. விவசாய உற்பத்தி தொழில்நுட்பம்
6. பொறி-இலத்திரனியல் (மெகாட்ரானிக்ஸ்) தொழில்நுட்பம்
7. குளிர்பதன மற்றும் வளிசீராக்கல் தொழில்நுட்பம்
8. உற்பத்தி தொழில்நுட்பம்
9. முன்பள்ளி முகாமைத்துவம்
10. அச்சிடல் தொழில்நுட்பம்
11. படவரைவு தொழில்நுட்பம்
12. பொறித் தொழில்நுட்பம்
13. தாதித் தொழில்
14. ஆரம்ப குழந்தைப்பருவ வளர்ச்சி
15. நுண்கலை (நடனம் மற்றும் மேளம்)

மேற்கூறிய பரீட்சைகளுக்கு மேலதிகமாக, பின்வரும் புதிய தொழிற்துறைகளுக்கும் மீளாய்வாண்டில் பரீட் சைகள் நடாத்தப்பட்டன

1. ஆலோசனை உளவியல்
2. ஆரம்ப குழந்தைப்பருவ அபிவிருத்தி
3. **கால்நடை வளர்ப்பு தொழில்நுட்பம்**

## செய்முறை கணிப்பீடு

தேர்ச்சிசார் பயிற்சி (CBT) பெற்ற தேர்வுநாடிகளுக்கு அவர்கள் பயின்ற பாடநெறி தராதர அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலேயே செய்முறைக் கணிப்பீடு நடாத்தப்படுவதுடன் மற்றைய முறைகளினூடாக தோற்றும் தேர்வுநாடிகளுக்கான கணிப்பீடு தராதர அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையத்திலோ அல்லது முன் அனுமதி பெறப்பட்ட நிலையத்தில் நடாத்தப்படும். நடாத்தப்படும் கணிப்பீட்டிலே சம்பந்தப்பட்ட தொழிற்துறையிலுள்ள இரண்டு (02) கணிப்பீட்டாளர்களின் பங்கேற்புடன் தேர்வுநாடிகளின் செய்முறைத் தேர்ச்சி சோதிக்கப்படும். இப் பணியைச் மேற்கொள்வதற்கான சில முக்கிய அலுவல்கள் பின்வருமாறு,

- ✓ தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் பதிவுக்களரியைப் பராமரித்தல்
- ✓ கணிப்பீடு கண்காணிப்பு
- ✓ தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ் விருதளிப்பு

**தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் பதிவுக்களரி**

**கணிப்பீட்டாளர்களின் நியமனம் மற்றும் பயிற்றுவிப்பு**



ஒவ்வொரு துறையிலும் திறமையும் நிபுணத்துவமும் கொண்ட தகுதிவாய்ந்த நபர்கள் இவ் ஆணைக்குழுவில் கணிப்பீட்டாளர்களாக பதிவு செய்யப்படுவதுடன், தேசிய தொழிற்திறன் தகுதிகளை விருதளிப்பதற்கான செய்முறை கணிப்பீடுகளை மேற்கொள்வதற்காக தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் பதிவுக்களரியை இவ் ஆணைக்குழு பராமரித்து வருகின்றது. TVET துறையிலே NVQ கணிப்பீடுகளை நடாத்துவதற்கான தன்னியக்க கணிப்பீட்டு கோரல் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், பதிவுக்களரியிலிருந்தே கணிப்பீடுகளுக்காக தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் தன்னியக்க முறையில் நியமிக்கப்படுகிறார்கள்.

2024 ஆம் ஆண்டு முடிவடையும் தறுவாயில் பதிவுக்களரியில் சுமார் 4,477 கணிப்பீட்டாளர் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். மேலும் அவ்வாண்டில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த 377 புதிய கணிப்பீட்டாளர்கள் இவ் ஆணைக்குழுவின் கணிப்பீட்டாளர் பதிவுக்களரியில் புதிதாக சேர்க்கப்பட்டனர். இது தவிர, தமிழ் மொழிமூலமாக கணிப்பீட் டை நடாத்துவதற்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகணங்களில் மூன்று (03) கணிப்பீட்டாளர்களுக்கான நிகழ்ச்சிகளும் நேர்முகத் தேர்வுகளும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டன.

கணிப்பீட்டாளர்களுக்கான பயிற்சி செயலமர்வுகள் 2023 மார்ச் முதல் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டில் அவ்வாறான ஒன்பது (09) பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

## தேர்ச்சிசார் கணிப்பீட்டு அலுவல்களை ஒழுங்குபடுத்துதல்

இதன் கீழ், இதுவரை கணிப்பீட்டாளர்களை நியமிக்கும் செயல்முறையை திறம்படச் செய்யும் வகையில், டிஜிட்டல் முறையில் கணிப்பீட்டாளர்களை நியமிக்கவும், கணிப்பீடுகளை நடாத்தும் திகதிகளை நிர்ணயிக்கவும் கணினிமயப்படுத்தப்பட்ட முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் டிஜிட்டல் முறையின் மூலம், முந்தைய குறைகளையும் தவறான சம்பவங்களையும் குறைக்க முடிந்துள்ளது. அதற்கமைய, EBT, CBT, RPL மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட FLM ஆகிய நான்கு (04) முறைகளினூடான கணிப்பீட்டிற்கு கணினிமயப்படுத்தப்பட்ட முறையினூடாக கணிப்பீட்டாளர் நியமனம் தற்போது இடம்பெறுகிறது. இதன் மூலம், கணிப்பீட்டாளர்களை நியமிக்கும் பணியின் தரம் கணிசமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வசதியின் மூலம் பிரதான பணியாக அரச மற்றும் தனியார் துறைகளுக்குரிய பயிற்சி நிறுவனங்களில் கணிப்பீடு நடாத்துவதற்கான அனுமதி வழங்குதல், கணிப்பீட்டாளர்களை தெரிவு செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கணிப்பீட்டாளர் நியமனம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துவதற்கு இயலுமாயிருந்தது.

**2024**

தொடர்புடைய அளவுகோல்கள் பரிசோதிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவால் பராமரிக்கப்படும் பதிவுக்களரியிலுள்ள கணிப்பீட்டாளர்கள் கணிப்பீட்டிற்காக நியமிக்கப்பட்டு, அவர்களால் கணிப்பீட்டு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

2024 ஆம் ஆண்டில் பல்வேறு பயிற்சி நிலையங்கள்/ நிறுவனங்கள் NVQ மட்டம் 1-4 வரையான கணிப்பீடுகளை நடாத்துவதற்காக இவ்வாணைக்குழுவிடம் கோரியதுடன் அவ்வாறான 3583 கோரிக்கைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட முறையின் மூலம் கணிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், NVQ மற்றும் 5 மற்றும் 6 இறுதிக் கணிப்பீடுகளை நடாத்துவதற்கு விண்ணப்பித்த 962 கணிப்பீடுகளுக்கும் கணிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

## தேர்ச்சிசார் கணிப்பீட்டு அலுவல்களை மேற்பார்வை செய்தல்

பயிற்சி நிறுவனங்கள் மற்றும் கணிப்பீட்டாளர்கள் ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற விதிமுறைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல் கையேடுகள் மற்றும் கணிப்பீட்டுக் கொள்கைகளின்படி கணிப்பீட்டு செயல்முறையை நடாத்த வேண்டும். இந்தச் செயல்முறை சரியாக நடக்கிறதா என்பது ஆணைக்குழு உத்தியோகத்தர்களின் எழுந்தமாறான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறது. NVQ சுற்றறிக்கை இலக்கம் 2017/1 இன்படி மற்றும் ஆணைக்குழு உயர் நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களின்படி கணிப்பீடுகள் தவறாக மேற்கொள்ளப்பட்டிருந்தால், நிறுவனங்களுக்கும் கணிப்பீட்டாளர்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**2024**

2024 ஆம் ஆண்டில், அரச மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவனங்களில் நடாத்தப்பட்ட 377 தேர்ச்சிசார் கணிப்பீடுகள் இவ் ஆணைக்குழுவால் கண்காணிக்கப்பட்டன.

கணிப்பீட்டின் முடிவுகளின் பிரகாரம், NVQ சுற்றறிக்கை இலக்கம் 2017/1 இன் படி மற்றும் உயர் நிர்வாகத்தின் ஆலோசனையின் பேரில், கணிப்பீட்டாளர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் மற்றும் அவர்கள் முரணாக செயல்பட்ட சந்தர்ப்பங்களில் உரியவாறு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

அத்துடன், கணிப்பீடு தொடர்பான பயிற்சி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம் விசாரணைகள் நடாத்தப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## கணிப்பீடுகளின் ஒருசீர்மையைப் பேணுவதற்கு செயலமர்வுகளை நடாத்துதல்

மீளாய்வாண்டில் கணிப்பீடுகளின் ஒருசீர்மையைப் பேணும் நோக்கில் சுகாதார மற்றும் படவரைவு துறைகளிலுள்ள தொழில்களுக்காகப் பதிவுசெய்யப்பட்டுள்ள கணிப்பீட்டாளர்களுக்காக இரண்டு (02) செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

### RPL முறையினுhடாக NVQ சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள் அதிகரிப்பு

2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் VTA, NAITA மற்றும் DTET ஆகிய நிறுவனங்கள் மட்டுமே RPL முறையினுhடாக NVQ சான்றிதழ் விருதளித்து வந்தன. எனினும் தற்போது மேலும் பல அரச நிறுவனங்களுக்கு RPL முறையினுhடாக NVQ கணிப்பீட்டை நடாத்தி விருதளிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறான பதினான்கு (14) நிறுவனங்களுக்கு e-RPL வசதியினூடாக இச்செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்படுகிறது.



### RPL முறையினூடாக NVQ வழங்கப்படும் நிறுவகங்கள்

- **இலங்கை கட்டுமானக்** கைத்தொழிற் கூடம்
- இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்
- தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
- தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்
- தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
- சமுத்திரப் பல்கலைக்கழகம்
- இலங்கை அணுசக்தி அதிகாரசபை
- இலங்கை விமானப்படை வைத்தியசாலை பயிற்சி நிலையம்
- இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான நிறுவகம்
- ஸ்ரீலங்கா டெலிகொம் பயிற்சி நிறுவகம்
- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
- கழிவு முகாமைத்துவ அதிகாரசபை

இதுவரை, எமது பிரிவினால் 27, 626 விண்ணப்பதாரர்களின் e-R PL விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டதுடன் அவற்றில் 25,596 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 2,030 பேரின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

**தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) சான்றிதழ் வழங்குதல்**

தேசிய தொழிற்திறன் தகுதி கணிப்பீட்டுச் செயல்முறையை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ் விருதளிக்கப்படுகிறது. கணிப்பீட்டாளர்களால் அளிக்கப்படும் கணிப்பீட்டு முடிவின் பெறுபேறுகள் அந்தந்த பயிற்சி நிறுவனங்களால்/ முகவர்களால் கணினி முறையினூடாக ஆணைக்குழு தரவுத்தளத்தில் (TVEC Database) செலுத்தப்படுகிறது. ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் ஆவணங்களையும் மற்றும் கணிப்பீட்டாளர் வழங்கிய பிற சான்றுகளையும் சரிபார்த்து அனுமதி வழங்கிய பின்பே தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

**2024**

2024 ஆம் ஆண்டிலே NVQ மட்டம் 1-6 வரைக்குமான 117,178 சான்றிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. திறன் அடிப்படையிலான மதிப்பீடு (CBT), தொழில் சார்ந்த பயிற்சி (EBT) மற்றும் முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (RPL) ஆகிய முறைகளினூடாகவே இச்சான்றிதழ்கள் அனைத்தும் வழங்கப்பட்டன.

**2024 ஆம் ஆண்டில் அச்சடிக்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ்கள் (நிறுவன ரீதியாக)**

| நிறுவகம் | மொத்தம் |
|---|---|
| தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் | 16292 |
| தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை | 19508 |
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 29578 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 7093 |
| தனியார் மற்றும் இதர பயிற்சி நிறுவகங்கள் | 44709 |
| **மொத்தம்** | **117180** |

| சான்றிதழ் வழிமுறை | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| **CBT** | **93701** |
| **RPL** | **16784** |
| **EBT** | **6693** |

***மூலாதாரம்: - மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத்தளம்***

**2024 ஆம் ஆண்டில் அச்சடிக்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ்கள் (பாலின ரீதியாக)**

| நிறுவகம் | சான்றிதழாளர்களின் எண்ணிக்கை | | | சான்றிதழ்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| DTET | 9840 | 4574 | 14414 | 11547 | 4746 | 16293 |
| NAITA | 10508 | 7548 | 18056 | 11450 | 8058 | 19508 |
| VTA | 15820 | 10068 | 25888 | 18368 | 11210 | 29578 |
| NYSC | 2153 | 3728 | 5881 | 2657 | 4443 | 7100 |
| Public & Private | 18601 | 21400 | 40001 | 21584 | 23125 | 44709 |
| Total | 56915 | 47317 | 104232 | 65599 | 51581 | 117178 |

## 2006 தொடக்கம் 2024 வரை வழங்கப்பட்ட NVQ சான்றிதழ்களின் புள்ளிவிபரவியல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவானது 2024 ஆம் ஆண்டு முடிவடைகையில் மொத்தமாக 857,084 NVQ சான்றிதழ்களை வழங்கியதுள்ளதுடன் தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறுவின் தொடக்கத்திலிருந்து நாட்டின் தொழிற்படையை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது.

| வருடம் | சான்றிதழ்களின் எண்ணிக்கை | வருடம் | சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2006 | 259 | 2017 | 65212 |
| 2007 | 1629 | 2018 | 61150 |
| 2008 | 8915 | 2019 | 78007 |
| 2009 | 11249 | 2020 | 47621 |
| 2010 | 13256 | 2021 | 45033 |
| 2011 | 16572 | 2022 | 117954 |
| 2012 | 18111 | 2023 | 112362 |
| 2013 | 22855 | 2024 | 117178 |
| 2014 | 28546 | | |
| 2015 | 44148 | | |
| 2016 | 47017 | மொத்தம் | 857084 |



## இதர சேவைகள்

### NVQ மட்டம் 04 இற்கான வினா வங்கியில் ஐந்து (05) புதிய தொழில்களுக்கான வினாக்களைத் தயாரித்தல்

NVQ மட்டல் 04 இல் உள்ள 15 தொழில்களுக்காக நடாத்தப்படும் பொது எழுத்துமூல அறிவுசார் கணிப்பீட்டுக்குப் பதிலாக, நிகழ்நிலை (ஆன்லைன்) முறை மூலம் அதற்கான அறிவுசார் கணிப்பீட்டை நடாத்தத் தேவையான ஆரம்பகட்டப் பணிகள் 2024ஆம் ஆண்டு நிறைவடைந்தன. சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் ஆதரவுடன், வினா வங்கிக்குத் தேவையான வினாக்களை கணிப்பீட்டு தர உத்தரவாதப் பிரிவு தயாரித்ததுடன், இதுவரையில் அவ்வாறான 20 தொழில்களுக்கான வினா வங்கிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2024 இல் தாபிக்கப்பட்ட நிகழ்நிலை முறைமையால் மேற்கொள்ளப்படும் அறிவுசார் கணிப்பீடுகள் தற்போது TVEC வள நிலையத்திலும் மாவட்ட மட்டத்திலும் நடாத்தப்படுகின்றன.

### 2024

### சர்வதேச தாபனங்களின் நிதியுதவினூடாக நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்டங்கள்

சர்வதேச தொழிலாளர் தாபனம்

கணினிமயப்படுத்தப்பட்ட முறையினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட NVQ மட்டம் 04 இற்கான அறிவுசார் கணிப்பீட்டுக்கான புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஐந்து (05) தொழில்களுக்கு வினாக்கள் தயாரிக்கப்பட்டு வினா வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வினா வங்கி தயாரிக்கப்பட்ட தொழில்களின் விபரம் பின்வருமாறு,

1. டீசல் என்ஜின் மோட்டார் பொறிவலர்
2. பல்மருத்துவ தொழில்நுட்பவியலாளர்
3. மருந்தக தொழில்நுட்பவியலாளர்
4. மனநல சேவை உதவியாளர்
5. பல் அறுவைச்சிகிச்சை தாதி உதவியாளர்

தற்போது வரையில் தயாரிக்கப்பட்டுள்ள வினா வங்கிகள் தர நிலையாக்கம் செய்யப்பட்டு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு மொழிமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய, இதுவரையில் இவ்வாணைக்குழுவினூடாக NVQ மட்டம் 04 இற்காக 20 தொழில்களை உள்ளடக்கும் வகையில் வினா வங்கியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வருடத்திற்கு சுமார் 80,000 தேர்வுநாடிகளுக்கு கணிப்பீட்டு அலுவல்களை விரைவுபடுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

### ஜேர்மன் சர்வதேச கூட்டுத்தாபனம்

தனியார் துறை பயிற்சி நிறுவனங்களால் நடாத்தப்படும் NVQ மட்டம் 5 மற்றும் 6 பாடநெறிகளுக்கான அரையாண்டு முடிவுப் பரீட்சைகள் கணிப்பீட்டு தர உத்தரவாதப் பிரிவினால் நடாத்தப்படுகிறது.

இப்பணியை மிகவும் முறையான வகையில் மேற்கொள்ளவும், அனைத்து அர மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் உள்ள அனைத்து பாடப்பிரிவுகளுக்கும்

ஒரே பரீட்சையை நடாத்துவதற்காக, NVQ மட்டம் 05 மற்றும் 06 இற்கான வினாத்தாள் வங்கி தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டது. அதன்படி அவை பின்வருமாறு,

1. கணிய அளவீடு
2. கட்டுமான தொழில்நுட்பம்
3. விவசாயத் தொழில்நுட்பம்
4. குளிர்பதன மற்றும் வளிசீராக்கல் தொழில்நுட்பம்
5. தகவல் தொழில்நுட்பம்
6. பட வரைவு
7. வாகன தொழில்நுட்பம்
8. உணவு தொழில்நுட்பம்
9. அழகியல்
10. எந்திரத் தொழில்நுட்பம்

தற்போது வரையில் வினாக்கள் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டம் 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நிறைவு செய்யப்படும்.

## தேசிய தொழிற்திறன் தகுதிகளை வழங்காத பாடநெறிகளை தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5/6 இற்கு சமனாக்கம்/ மேப்பிங் செய்தல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) பல்வேறு தொழிற்கல்வி தகுதிகளை அங்கீகரித்து அந்தந்த பாடநெறிகளுக்குச் சமமான NVQ மட்டங்களை தேவைப்படும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தகுதி வழங்கும் அமைப்புகளின் கோரிக்கைகளுக்கு இணங்க இலங்கையிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுவதற்கான முறையான நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 5/2021 (www.tvec.gov.lk) மற்றும் பிற தொடர்புடைய அளவுகோல்கள் என்பவற்றின் பிரகாரம் தொழிற்பயிற்சி நிறுவனமும் பாடநெறியும் மதிப்பீடு செய்யப்படுகிறது**.**

**2024**

தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5/6 இற்குச் சமனாக்கஞ் செய்வதற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஏழு (07) பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் ஆணைக்குழு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அவற்றில் இரண்டு (02) பாடநெறிகள் சமனாக்கஞ் செய்தல் இடம்பெறவில்லை. பின்வரும் நிறுவகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகள் NVQ மட்டம் 05/06 இற்குச் சமனாக்கஞ் செய்யப்பட்டன.

| பாடநெறி நடாத்தப்படும் நிறுவகம் | சமனாக்கம் செய்யப்பட்ட பாடநெறி | NVQ மட்டம் 05/06 |
|---|---|---|
| ஸ்ரீலங்கன் டெக்னிக்கல் ட்ரேனிங், | விமான பராமரிப்பு (Aeroplane/Turbine) B1.1 | மட்டம் 06 |
| ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் | விமான பராமரிப்பு (Avionics) B2 | மட்டம் 06 |
| இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | மட்டம் 06 |

| | | |
|---|---|---|
| நிறுவகம் | முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா | |
| இலங்கை பட்டயம் பெற்ற ஆளணி முகாமை நிறுவகம் | மனித வள முகாமைத்துவத்தில் டிப்ளோமா | மட்டம் 05 |
| | தொழில்சார் மனித வள முகாமைத்துவத்தில் டிப்ளோமா | மட்டம் 05 |

## தொழில் முதிர்ச்சி பெற்ற தேர்வுநாடிகளுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 5 இற்கு சமனாக்கம் செய்தல்

2024 ஆம் ஆண்டில், தாபனங்களில் கடமையாற்றுகின்ற மேற்பார்வை மட்ட சேவை அனுபவமுள்ள தேர்வுநாடிகளுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 இற்குச் சமமான தகுதிகளை வழங்குவதற்காக சாதாரண முறை மற்றும் விரைவான முறையின் கீழ் விண்ணப்பித்த துறைகளுக்காக நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டு 51 தகுதிவாய்ந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.. மேலும் இந்த முறையின் மூலம் 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட சான்றிதழ்களுக்கு பதிலாக 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 143 முன்னாள் சான்றிதழ் பெற்றவர்களுக்கு புதிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேற்பார்வை மட்ட பணி அனுபமுள்ளவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 05 இற்கு சமமான சான்றிதழ்களை வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டில் சாதாரண முறையின் மூலம் 191 விண்ணப்பங்களும் விரைவு முறை மூலம் 87 விண்ணப்பங்களும் பெறப்பட்டன, மேலும் மீளாய்வாண்டின் அவ்விண்ணப்பங்கள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன.

தேசிய தொழிற்திறன் தகுதிகளை வழங்காத பாடநெறிகளுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி மட்டங்களுக்கு சமனாக்கஞ் செய்தல்

தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிக்குச் சமனான தகுதியை வழங்க செய்தித்தாள் விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அறிவைச் சோதிக்க 2019, 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. அவ்வாறு நடாத்தப்பட்ட பொதுப் பரீட்சைகளில் சித்தியடைந்து தொழில்முறை மீளாய்வு நேர்முகத் தேர்வில் சித்தியடையாதவர்களுக்கு மீண்டும் ஒருமுறை தொழில்முறை மீளாய்வு நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டது. தொழில்முறை மீளாய்வு நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 151 பேருக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 05 இற்கு சமனான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

| பாடநெறியின் பெயர் | தேசிய தொழிற்திறன் தகுதிக்கு சமனான (NVQ)மட்டம் | வழங்கப்பட்ட சமப்படுத்தல் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (குடிசார் பொறியியல்) மற்றும் தேசிய கைத்தொழில் தொழில்நுட்பச் சான்றிதழ் (குடிசார் பொறியியல்) | மட்டம் 05 | 80 |
| தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (கணிய அளவீடு) | மட்டம் 05 | 23 |
| தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (மின் பொறியியல்) | மட்டம் 05 | 40 |
| தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (எந்திரப் தொழில்நுட்பம்) | மட்டம் 05 | 17 |

பின்வரும் சான்றிதழ்களுக்கான சான்றிதழ் வைத்திருப்பவர்களின் கோரிக்கைகளின்படி சமமான தேசிய தொழிற்திறன் தகுதி மட்டச் சான்றிதழ்களை வழங்குதல்

| நிறுவனத்தின் பெயர் | பாடநெறியின் பெயர் | தேசிய தொழிற்திறன் தகுதிக்கு (NVQ) சமனான மட்டம் | வழங்கப்பட்ட சமப்படுத்தல் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை/ தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | மட்டம் 05 | 04 |
| வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் | கணிய அளவீட்டில் டிப்ளோமா | மட்டம் 05 | 01 |
| பொறியியல் தொழில்நுட்ப நிறுவகம் | பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா | மட்டம் 06 | 29 |
| இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் | முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 06 | 09 |
| | தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 06 | 11 |

| நிறுவனத்தின் பெயர் | பாடநெறியின் பெயர் | தேசிய தொழிற்திறன் தகுதிக்கு (NVQ) சமனான மட்டம் | வழங்கப்பட்ட சமப்படுத்தல் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | மின் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 06 | 02 |
| | குடிசார் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 06 | 02 |
| | விவசாயத் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 06 | 02 |
| | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா | மட்டம் 06 | 10 |

## தகவல் முறைமை

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு கணினி தகவல் முறைமைகளை அபிவிருத்தி செய்து நிர்வகிக்கும் அதே வேளையில் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் முறைமைகளுடன் நேரடித் தொடர்பு கொண்ட தொழில் பயிற்சி நிறுவனங்கள் தங்களின் தொடர்புடைய தரவை இற்றைப்படுத்தக்கூடிய இயலுமையையும் கொண்டுள்ளன. மேலும், தகவல்களை வழங்க பல்வேறு இணையதள பக்கங்கள் பராமரிக்கப்படுகிறது.

## மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்தை அபிவிருத்தி செய்து பராமரித்தல்

ஆணைக்குழுவின் செயல்பாடுகளை மிகவும் துல்லியமாக இற்றைப்படுத்தி வைத்திருத்தல், ஆணைக்குழுவை மென்மேலும் மேம்படுத்துதல் மற்றும் தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் புதிய அபிவிருத்திகளை அறிமுகப்படுத்தல்கள் போன்ற விடயங்கள் ஆணைக்குழு இணைய தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் விடயங்கள் TVET துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இணைய தளத்தின் நகல் கீழே தரப்பட்டுள்ளது.**




## ஆணைக்குழுவின் பிரதான இணையதளம் பின்வரும் இணையதளங்களுக்கான அணுகலை வழங்குகிறது.

- ✓ தொழிநுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கை
- ✓ தேசிய தொழிற்திறன் தகுதிச் சுற்றறிக்கைகள்
- ✓ தொழிலாளர் சந்தை தகவல் (LMI)
- ✓ தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ)
- ✓ ஆணைக்குழு ஆராய்ச்சி வட்டம் (Research Cell)
- ✓ செய்திகள் மற்றும் நிகழ்வுகள்
- ✓ தகவல் முறைமைகள்
- ✓ தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி
- ✓ பாடநெறி பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் (Registration & Accreditation)
- ✓ திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி (Planning & Research)
- ✓ அக இணையம் (Intranet)
- ✓ தேசிய தொழிற்திறன் தகுதியை விருதளிக்கும் முறை
- ✓ விண்ணப்பங்கள் மற்றும் தகவல்களைப் பதிவிறக்கம்
- ✓ புதிய கணிப்பீட்டாளர்களுக்கான நிகழ்நிலை விண்ணப்பித்தல்
- ✓ அக இணைய வலையமைப்பு

## தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இலங்கையில் தற்போதைய தொழிற்தேவை மற்றும் பிற தொழிற்சந்தை தகவல்களை வழங்கும் நோக்கத்துடன் தொழிற்சந்தை தகவல் முறைமையை நிறுவியுள்ளது.

கொள்கை வகுப்பாளர்கள், வாழ்தொழில் வழிகாட்டுநர்கள், வேலைவாய்ப்பு முகவர்கள், பயிற்சியாளர்கள், வேலை வழங்குபவர்கள் மற்றும் தொழிற்சந்தைத் துறையில் வேலை செய்பவர்களின் நலனுக்காக தரவு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

## தொழிற்சந்தை தகவல் இணைய பக்கம்

பிரத்தியேக தொழிலாளர் சந்தை தகவல் இணையப் பக்கம் அதன் பயனர்களுக்கு பயனுறுதியும் வினைத்திறனும் வாய்ந்த தொழிற்சந்தை தகவல் சேவையை வழங்கும் நோக்கத்துடன் 2024 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது.

- ✓ தற்போதைய தொழிற்சந்தை தகவல்களின் பகுப்பாய்வு
- ✓ பாடநெறித் தகவல்களை இணையத்தில் (ஆன்லைனில்) பார்க்கும் வசதி
- ✓ கடந்தகால தொழிற்சந்தை தகவல் வெளியீடுகள்
- ✓ தொழிற்சந்தையின் எண்ணக்கருத்து மற்றும் வரைவிலக்கணம்
- ✓ பயனுள்ள இணையதளங்களுக்கான அணுகல்
- ✓ சுயவிபரக் கோவைடன் (பயோடேட்டா) விண்ணப்பங்களைச் செய்வதில் உதவுதல்
- ✓ வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல்களைப் பெற முடிதல்
- ✓ தொழிற்துறை மற்றும் தொடர்புடைய தொழிற்துறைகளில் முதல் 10 அதிக கேள்வியுள்ள தொழில்கள் காட்சிப்படுத்தி முக்கியமான தகவல்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சந்தை தகவல்களின் கருத்தியல் விதிமுறைகள் வரையறைகள் மற்றும் சொற்களஞ்சியம், சொற்கள் தொழிற்சந்தை வேலை விளம்பரங்கள், தொழில்தருநர் சமர்ப்பித்த பல்வேறு தகவல்கள் போன்றவை இவ் வலைப்பக்கத்தில் இற்றைப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

## பதிவு மற்றும் தராதர அங்கீகார இணைய பக்கம்

இந்த இணையப் பக்கம் நிறுவன பதிவு மற்றும் பாடநெறி அங்கீகாரம் பற்றிய அனைத்து தகவல்களையும் வழங்குகிறது. மேலும், இப்பக்கத்தில் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள், பாடநெறி மற்றும் தராதர அங்கீகாரம் பெற்ற பாடநெறிகளின் விபரங்கள், தர முகாமைத்துவ முறைமை நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள், நிறுவன பதிவு விண்ணப்பங்கள், நிறுவன பதிவு புதுப்பித்தல் விண்ணப்பங்கள், பாடநெறி தராதர அங்கீகார விண்ணப்பங்கள் போன்றவையும் உள்ளன. மேலும், பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தராதர அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள் பற்றிய தகவல்களை நிகழ்நிலையில் (Online) சரிபார்த்துக் கொள்ளலாம். இவ்வசதியினூடாக

பயனர்கள் எவரும் பல்வேறு முறைகளின்படி தகவல்களைக் பெற்றுக்கொள்ள முடியும்.

பாடநெறிப் பதிவு, நிறுவனப் பதிவு ஆகியவற்றுக்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்க முடியும் என்பதும்இ ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனி போர்டல் (Portal) ஒதுக்கப்பட்டிருப்பதும் ஒரு சிறப்பம்சமாகும். இவ் வசதி 2024 ஆம் ஆண்டில் மேலும் மேம்படுத்தப்பட்டதுடன் NVQ சான்றிதழ்களை அச்சிடும் முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது தர முகாமைத்துவத்தின் ஒரு படி முன்னேற்றமாகும்.

## புதிய துணை அமைப்புகளைச் சேர்ப்பதன் மூலம் NVQ ஆன்லைன் முறைமையை மேம்படுத்துதல்.

2024 ஆம் ஆண்டில், முக்கிய கணினி மென்பொருளான NVQ தகவல் முறைமை மென்பொருளில் புதிய அம்சங்கள் மற்றும் அமைப்பு மேம்பாடுகள் செய்யப்பட்டன. இது எங்கள் அனைத்து பங்குதாரர்களுக்கும் உயர்தர சேவையை வழங்க எங்களுக்கு உதவியுள்ளது.

### இணையம், மின்னஞ்சல் மற்றும் வசதிகள்

- ✓ மின்னஞ்சல் பயன்பாடு குறித்த அரசாங்க சுற்றறிக்கையின்படி, அலுவலகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் செயல்திறனை அதிகரிக்கவும், செலவுகளைக் குறைக்கவும், நேரத்தை மிச்சப்படுத்தவும், ஒவ்வொரு ஊழியருக்கும் இணையம் மற்றும் மின்னஞ்சல் வசதிகளைப் பயன்படுத்த புதுமையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இது ஆணைக்குழுவின் ஊழியர்களின் தகவல் தொடர்பாடல் திறனை மேம்படுத்துவதற்கும், இணையம் மூலம் புதிய அறிவைப் பெறுவதற்கும் உதவியுள்ளது. ஊழியர்களுக்கு தகவல்களை வழங்க ஒரு உள்ளக வலையமைப்பு பராமரிக்கப்படுகிறது.
- ✓ இந்த புதிய தொடர்பாடல் முறை அதன் நெகிழ்வுத்தன்மை மற்றும் தகவல்களை எளிதாக அணுகுவதன் காரணமாக அதன் பயனர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.
- ✓ மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஊழியர்கள் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதற்காக மின்னஞ்சல் மற்றும் இணைய வசதிகள் 2024 ஆம் ஆண்டில் மேலும் விரிவுபடுத்தப்பட்டன.
- ✓ தகவல் முறைமைகள் பிரிவு நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்த உள்ளக கணினி வலையமைப்புகள், இணையம் மற்றும் மின்னஞ்சல் அமைப்புகள் கணினி வலையமைப்பு அணுகல் தடைகள்: வெளிப்புற அணுகல் கட்டுப்பாட்டு அமைப்புகள் (Firewall) போன்றவை 2024 ஆம் ஆண்டிலும் பராமரிக்கப்பட்டன.

## ஆணைக்குழுவின் நூலகம்

ஆணைக்குழுவின் நூலகம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்வியின் பல்வேறு துறைகளில் பல்வேறு நிலைகளில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழிற்பயிற்சித் துறையில் உள்ள பல்வேறு நபர்களுக்கு நூலக வசதிகளை வழங்கியுள்ளது. அதன்படி, பின்வரும் சேவைகள் நூலகத்தால் வழங்கப்படுகின்றன.

- ✓ தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறை தொடர்பான புத்தகங்கள்இ ஆராய்ச்சி அறிக்கைகளை வழங்குதல்
- ✓ ஆணைக்குழுவின் வெளியீடுகளை விநியோகித்து நிர்வகித்தல்
- ✓ பருவ இதழ்கள் பயன்படுத்துவதை எளிதாக்குதல்
- ✓ தினசரி செய்தித்தாள்கள் மற்றும் பிற ஆவணங்கள் பயன்படுத்துவதை எளிதாக்குதல்
- ✓ பல்வேறு பிற தகவல் குறிப்பு ஆவணங்கள் சேவைகள் மற்றும் தகவல் சேவை வழங்கல் வசதிகள்

இதற்கு மேலதிகமாக, ஆணைக்குழுவின் நூலகத்தில் இல்லாத ஆனால் தேவையான நூலகத் தகவல் சேவையில் ஆர்வமுள்ள வாசகர்களுக்கு நூலகங்களுக்கிடையேயான சேவைகள் வழங்கப்படுகிறது. ஆணைக்குழு ஊழியர்களின் தகவல் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கடந்த ஆண்டில் மற்றைய நூலகங்களிலிருந்து தகவல் வளங்கள் பகிரப்பட்டன.

மேலும், பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தின் நிறுவன அங்கத்துவத்தையும் பெற்றுள்ளதுடன் இதன் மூலம் கூடுதல் வாசிப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது

## பயிற்சி அமர்வுகளை நடாத்துதல்

ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் புதிதாக பதிவுசெய்துகொள்ள எத்தனிக்கும் நிறுவனங்களுக்கு வசதிகளை செய்துகொடுப்பதற்கான மென்பொருள் முறைமை பராமரித்தல் மற்றும் அம்முறைமை வெற்றிகரமாக செயற்படுத்துதற்கான பயற்சி அமர்வுகள் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

## ஸ்கில்ஸ் பாஸ்போர்ட் (Skills Passport) வழங்குதல்

2024 ஆம் ஆண்டிலும் ஸ்கில்ஸ் பாஸ்போர்ட் வழங்குதல் வெற்றிகரமாக நிறைவடைந்தது. 2024 ஆம் ஆண்டில் ஸ்கில்ஸ் பாஸ்போர்ட்களை வழங்குவதற்கான இலக்கு 500 ஆக இருந்தது, இந்த ஆண்டு 756 உரிமங்கள் வழங்கப்பட்டன.

ஸ்கில்ஸ் பாஸ்போர்ட் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதற்காக பதிவுசெய்வதற்காக மாவட்ட அளவில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. 2024 ஆம் ஆண்டில் இதுபோன்ற பத்து (10) நடாத்தப்பட்டன.

# கைத்தொழிற்துறை உறவுகள்

## அறிமுகம்

தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் தேவைகளுக்கு ஏற்ப எதிர்கால தொழில் வாய்ப்புகளுக்கு திறமையான பணியாளர்களை உருவாக்குவதற்காக, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு கைத்தொழிற்துறை மற்றும் துறையுடன் தொடர்புடைய பிற தரப்பினருடன் நல்லுறவுகளை ஏற்படுத்தியுள்ளது. துறைசார் திறன் சபைகள் பிராந்திய தொழிலதிபர்களுடன் உறவுகளைப் பேணி தொழிற்துறையின் தேவைகளை அடையாளம் காண்கின்றன.மேலும், இளைஞர்களுக்கு சரியான தொழில் வழிகாட்டுதலை வழங்குவதற்கும், தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் மேம்பாட்டிற்காக சர்வதேச அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் உயர்தர தொழில் வழிகாட்டுதல் சேவைகளை செயல்படுத்த தேவையான பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.. மேலும், இவை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## துறைசார் திறன் சபைகளை நடாத்திச் செல்லல்

ஆறு (06) துறைசார் திறன்கள் சபைகளையும் இரண்டு (02) ஆலோசனை சபைகளையும் நிறுவி அவற்றை ஒருங்கிணைத்துமிகவும் திறம்பட நடாத்திச் செல்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

1. கட்டுமானத் துறைசார் திறன்கள் சபை
2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை
3. உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை
4. சுற்றுலாத் துறைசார் திறன்கள் சபை
5. விவசாயத் துறைசார் திறன்கள் சபை
6. மோட்டார் வாகனத் துறைசார் திறன்கள் சபை
7. சுகாதாரம் மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆலோசனைக் குழு
8. பொதியிடல் (பேக்கேஜிங்) தொழில் ஆலோசனைக் குழு

## கட்டுமானத் துறைசார் திறன்கள் சபை

கட்டுமானத் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்கள், இந்தத் துறையில் பிரதிநிதித்துவத்துடன் தொழில்வாண்மை சங்கங்களை உருவாக்கியுள்ளனர். மேலும் இந்தத் துறையின் திறனுள்ள தொழிலாளர் தேவைகளை எதிர்பார்த்து, தேசிய தேர்ச்சித் தரங்களை அபிவிருத்தி செய்வதுடன் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தரங்களைப் புதுப்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சர்வதேச உதவிவழங்கும் நிறுவனங்களுடனும் கலந்துரையாடல்களும் ஒருங்கிணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையிலுள்ள தொழில்துறையின் தேவைகளைக் கண்டறிந்து அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக இந்தத் துறைசார் திறன்கள் சபை தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பல்வேறு சந்தர்ப்பங்களில் கோரிக்கைகளின் பேரில் தொடர் அமைச்சு மற்றும் இதர அமைச்சகங்களுக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

## உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை

இந்தத் திறன்கள் சபை உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகளின் முக்கிய தொழில்துறை துறைகளை உள்ளடக்கிய தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் தொழிற்படுகின்றது. மேலும் தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப துறைக்கு பொருத்தமான தேர்ச்சி தரங்கள் உருவாக்கப்பட்டன.

## சுற்றுலாத் துறைசார் திறன்கள் சபை

இந்த திறன்கள் சபை சுற்றுலாத் துறையின் பிரதிநிதித்துவத்துடன் தாபிக்கப்பட்டு தொழிற்படுவதுடன், அந்தத் துறையின் முக்கிய தொழிலாளர் தேவைகளை இனங்கண்டு அவற்றைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## விவசாயத் துறைசார் திறன்கள் சபை

விவசாயத் துறையில் உள்ள தொழில்துறை வல்லுநர்களின் பங்களிப்புடன் தாபிக்கப்பட்ட இந்த துறைசார் திறன்கள் சபை இதுவரையில் அதன் ஆரம்பப் பணிகளை முடித்துவிட்டு தொழிற்பாட்டு நிலையில் உள்ளது.

விவசாயத் தொழில்நுட்ப தகவல் நிலையத்தின் பிரதான பங்களிப்புடன் ட்ரோன் பைலட் விவசாயத் தொழில்நுட்பப் பாடநெறி நடாத்தப்பட்டது.

- 2024 இல் நடைபெற்ற Skills Expo கண்காட்சியில் இத் துறைசார் திறன்கள் சபை பங்கேற்றது.
- விவசாயத் துறையில் தொடர்புடைய மாகாண சபைகள், அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் திறன் மேம்பாட்டிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- விவசாயத் துறையில் தேவைப்படும் தொழில்களுக்கான தேசிய தேர்ச்சித் தரங்களைத் தயாரிப்பதற்கான உதவியும் வழங்கப்பட்டது.

## மோட்டார் வாகனத் துறைசார் திறன்கள் சபை

மோட்டார் வாகனத் துறைசார் திறன்கள் சபையானது மோட்டார் வாகனத்துறையின் புத்தாக்கம், திறன் மேம்பாடு மற்றும் உலகளாவிய முதன்மையின் புதிய சகாப்தத்திற்கு வழியமைத்தல் என்பனவற்றுடன் வீதி விபத்துகளைக் குறைத்தல்,

பணி நிலைமைகளையும் தொழில்நுட்ப வல்லுநர்களின் கண்ணியத்தையும் மேம்படுத்துதல் மற்றும் இந்தத் துறையில் திறன் அபிவிருத்தி மூலம் பரவலாக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியனவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு நடைமுறைச் செயல்திட்டத்தை வழங்குவதன் ஊடாக மோட்டார் வாகனத் துறைசார் திறன்கள் சபை குறிப்பிடத்தக்க வாய்ப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

• 2024 இல் நடைபெற்ற Skills Expo கண்காட்சியில் இச்சபை பங்கேற்றது

## சுகாதாரம் மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆலோசனைக் குழு

சுகாதாரம் மற்றும் பராமரிப்புத் துறையின் பிரதிநிதித்துவத்துடன் தொடர்புடைய நடவடிக்கை எடுப்பதற்காக இந்தக் குழு தாபிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவில் பிரதான தனியார் மருத்துவமனைகள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளன.

பின்வரும் தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் 2024 இல் தயாரிக்கப்பட்டன.

- N85S041.0 : Cardiac Care Technician
- N85S042.0 : Health Care Assistant (Radiology)

## பொதியிடல் (பேக்கேஜிங்) தொழில் ஆலோசனைக் குழு

பொதியிடல் துறையில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களின் ஆதரவுடன் தாபிக்கப்பட்டுள்ள பொதியிடல் தொழில் ஆலோசனைக் குழுவானது ஐந்து (05) கைத்தொழிற்துறைகளின் கூட்டாக்கத்துடன் தொழிற்படுகிறது.

## துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்ற மீளாய்வு

i. திறன்கள் சபைகளின் தலைமையில் நாட்டில் இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட "Skills Expo" கண்காட்சி ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது.
ii. துறைசார் திறன்கள் சபைகளின் தலைவர்களுடன் கூட்டங்களை நடாத்தி தேர்ச்சியை மீளாய்வு செய்து எதிர்கால நடவடிக்கைகளை விளக்குதல்.
iii. கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் 25 கைத்தொழிற்துறைகளுடன் தொடர்புபட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் அலுவல்களை மேற்கொள்ளல்
iv. துறைசார் திறன்கள் சபைகளி தேர்ச்சியை மீளாய்வு செய்வதற்கும் எதிர்கால திட்டங்களை செயல்படுத்துவதற்கும், திட்டங்களை செயல்படுத்துவதில் எழும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் அமைச்சின் பங்கேற்புடன் 2024 ஆம் ஆண்டில் இரண்டு (02) கூட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டன.
v. ஹெகா டைல் மற்றும் நோரிடாகி போன்ற தொழில்துறை நிறுவனங்களை பார்வையிடுவதன் மூலம் தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ்களைப் பெறுவது குறித்தும், முந்தைய கற்றல் அங்கீகரிப்பு முறை மூலம் தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ்களைப் பெறுவது குறித்தும் தொழிலதிபர்களுக்குக் தெரியப்படுத்துதல்.

## தொழில் வழிகாட்டுதல் சேவைகளின் தரப்படுத்தல்

தொழில் வழிகாட்டுதல் சேவையின் தரப்படுத்தலின் கீழ் தொழில் வழிகாட்டுதல் நிலையங்களின் பதிவு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்வதற்கான பிரமாணங்களைப் பூர்த்தி செய்த 15 தொழில் வழிகாட்டுதல் நிலையங்கள் பதிவு செய்யப்பட்டன.

| மாவட்டம் | நிலையம் |
|---|---|
| மட்டக்களப்பு | தொழில்நுட்பக் கல்லூரி - மட்டக்களப்பு |
| கம்பஹா | தொழில்நுட்பக் கல்லூரி – கம்பஹா |
| ஹம்பாந்தோட்டை | தொழில்நுட்பக் கல்லூரி – பெலியத்தை |
| புத்தளம் | தொழில்நுட்பக் கல்லூரி – புத்தளம் |
| திருகோணமலை | தொழில்நுட்பக் கல்லூரி – திருகோணமலை |
| யாழ்ப்பாணம் | தொழில்நுட்பவியல் கல்லூரி - யாழ்ப்பாணம் |
| அம்பாறை | ஹார்டி தொழில்நுட்பவியல் கல்லூரி – அம்பாறை |
| பதுளை | தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை – மாவட்ட காரியாலயம் – பதுளை |
| மொனராகல் | தேசிய பயிலுநர்ℯ கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை – மாவட்ட காரியாலயம் – மொனராகல் |
| காலி | இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை – மாவட்ட காரியாலயம் - காலி |
| பொலன்னறுவை | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் – மாவட்ட காரியாலயம் – பொலன்னறுவை |
| மாத்தறை | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் – மாவட்ட காரியாலயம் – மாத்தறை |
| பதுளை | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் – மாவட்ட காரியாலயம் – பதுளை |
| குருநாகல் | தொழில்நுட்பக் கல்லூரி – குருநாகல் |
| வவுனியா | தொழில்நுட்பக் கல்லூரி – வவுனியா |

- மூன்று (03) தொழில் வழிகாட்டுதல் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- தொழில் வழிகாட்டல் அலுவலர்கள், திறன் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அலுவலர்களுக்கு முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (RPL) விண்ணப்பித்தல் செயற்பாட்டை e-RPL முறையினூடாக செயல்படுத்துவது குறித்தான செயலமர்வுகள் நடாத்தப்படுதல்.
- திறன் அபிவிருத்தி அலுவலர்கள், தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் தொழில் வழிகாட்டல் துறையில் உள்ள அதிகாரிகளுக்கான திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் நிதியுதவியுடன் தொழில் வழிகாட்டல் அலுவலர்களுக்கான நிகழ்நிலை (ஆன்லைன்) முறைமையொன்றை ஆரம்பித்தல்.
- தொழில் வழிகாட்டுதல் மூலோபாயத் திட்டம் (Strategic Plan) தயாரித்து வலிதாக்கம் செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுதல்

- தொழில் வழிகாட்டல் சேவைகளை தரப்படுத்தப்பட்ட முறையில் செயல்படுத்துவதற்காக 12 தொழில் வழிகாட்டல் நிலையங்களைப் பதிவு செய்தல்.

## தொழிற்கல்வியில் ஆர்வமுள்ள பங்குதாரர்களுக்கு தெரியப்படுத்துவதற்கான (விழிப்புணர்வு) விசேட வேலைத்திட்டம்

### தேசிய தொழிற்திறன் தகுதிகளின் சர்வதேச அங்கீகாரத்தை உறுதி செய்வதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பு வைத்தல்

இலங்கையின் தேசிய தொழிற்திறன் தகுதியை அங்கீகரித்து அதனை ஒத்துக்கொள்வதற்காக சவுதி அரேபியா மற்றும் பிற நாடுகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதுடன் மேலும் தேவையான சட்ட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் பலனாக, 2024 ஆம் ஆண்டில் 124 இலங்கையர்கள் அந்த நாடுகளில் வேலைவாய்ப்புகளுக்கு செல்வதற்கான தகுதிகளைப் பெற்றுக்கொண்டனர். தொழில் வழிகாட்டுதல் அதிகாரிகளின் அறிவு மற்றும் திறன்களைப் புதுப்பித்தல் மற்றும் தொழில் வழிகாட்டுதல் தகவல் அமைப்புக்கான KOICA உடனான 2023-2026 ஒப்பந்தத்தின் கீழ் ஒரு நிகழ்நிலை (ஆன்லைன்) முறைமையை உருவாக்குவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன

### TVEC/ NVQ குறித்த கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆரம்ப தினத்தன்று TVEC/ NVQ குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றும் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.
- தெரண திறன் படை கண்காட்சி மற்றும் தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சித் தொடர் மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி, பொலொன்னறுவை தொழில்நுட்பக் கல்லூரி, அனுராதபுரம் தொழில்நுட்பவியல் கல்லூரி, கேகாலை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வரக்காபொல தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய இடங்களில் ஐந்து (05) மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடைபெற்றது.
- மாத்தறை மாவட்ட செயலகத்தின் தலைமையில் வேலை தேடுபவர்களை உள்ளூர்/வெளிநாட்டு வேலைகள் மற்றும் தொழில்சார் பயிற்சி நெறிகளுக்கு பரிந்துரைப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது.
- கட்டுமானவியலாளர்கள் சங்கத்தால் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட Construction Expo 2024 கண்காட்சியில் பங்கேற்றவர்களுக்கு TVEC/ NVQ குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.
- TVEC Online System/ NVQ தொடர்பாக வயம்ப ஹோட்டல் பாடசாலை கல்விசார் ஊழியர்களுக்கு இரண்டு நாள் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

- பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற Build SL - 2024 கண்காட்சியில் கலந்து கொண்டு பங்கேற்றவர்களுக்கு TVEC/ NVQ பற்றிய நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.
- பேக்கரித் துறையில் சுயதொழில் செய்பவர்களுக்கு RPL முறை மூலம் NVQ வை எவ்வாறு பெறுவது என்பது குறித்த நிகழ்ச்சியொன்று தெரண தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.
- மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தினூடாக கழுத்துறை மாவட்ட செயலக அலுவலகத்தில் நடாத்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் சந்தை நிகழ்வில் கலந்துகொண்டு RPL/NVQ பற்றிய கருத்தரங்கொன்று கைத்தொழிற்துறையில் உள்ளவர்களுக்காக நடாத்தப்பட்டது.
- ஜூலை 15, 2024 திகதியன்று உலக இளையோர் திறன்கள் தினத்தை கொண்டாடுவதற்காக அமைச்சுடன் இணைந்து இரத்மலானையிலுள்ள ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் புத்தாக்கப் போட்டியும் திறன்கள் கண்காட்சியும் நடைபெற்றது.
| | மோட்டார் வாகன பராமரிப்புச் செலவு PE-0572 | 1,023,960 | 797,697 | 279,432 |
| | மோட்டார் வாகன பராமரிப்புச் செலவு NC-0021 | 877,692 | 653,293 | 570,167 |
| | மோட்டார் வாகன பராமரிப்புச் செலவு PF - 6302 | 609,739 | 1,035,340 | 696,459 |
| | | 9,649,968 | 8,139,529 | 5,308,174 |
| **13.1** | **நிறுவக பதிவுச் செலவு** | | | |
| | நிறுவக பதிவு மதிப்பீட்டுக் கட்டணங்கள் | 6,715,792 | 5,045,114 | 3,546,171 |
| | நிறுவக பதிவிற்கான பிரயாணச் செலவு (எரிபொருள்) | | | 12,000 |
| | | 6,715,792 | 5,045,114 | 3,558,171 |
| **13.2** | **பாடநெறி தராதர அங்கீகாரச் செலவு** | | | |
| | பாடநெறி கணிப்பீட்டுக் கட்டணம் | 6,035,508 | 3,567,222 | 2,981,690 |
| | தராதர அங்கீகார எரிபொருட் செலவு | | | 3,700 |
| | | 6,035,508 | 3,567,222 | 2,985,390 |
| **13.3** | **NVQ நிகழ்ச்சித்திட்ட செலவு** | | | |
| | NVQ நிகழ்ச்சித்திட்டம் / மேப்பிங் | 2,933,750 | 3,183,077 | 2,146,149 |
| | கணிப்பீட்டாளர் பதிவு | 954,635 | 689,600 | 706,310 |
| | ISO சான்றளிப்பு மற்றும் செயலாக்கம் | 19,364 | | |
| | NVQ கணிப்பீட்டுக் கட்டணம் | 40,638,077 | 29,512,241 | 15,733,198 |
| | NVQ பரீட்சைக் கட்டணம் | 26,655,636 | 24,322,926 | 32,397,005 |
| | NVQ சான்றிதழ் அச்சடிப்பு | 12,728,003 | 9,845,475 | 6,537,091 |
| | கண்காணிப்பு | 3,116,516 | 2,232,666 | 541,730 |
| | NVQ நடைமுறை | 295,668 | 139,995 | 33,530 |
| | கணிப்பீட்டாளர் வலுவூட்டம் மறுபயிற்சி | 286,225 | 1,124,481 | 256,165 |
| | | 87,627,874 | 71,050,462 | 58,351,177 |
| **13.4** | **துறைசார்ந்த VET திட்ட தயாரிப்புச் செலவு** | | | |
| | மாகாண VET திட்டம் | - | 1,174,000 | 1,500,000 |
| | | - | 1,174,000 | 1,500,000 |
| **13.5** | **LMI மற்றும் TVET வழிகாட்டி செலவு** | | | |
| | LMI தரவு குறியிடல் மற்றும் ஏற்றல் கட்டணம் | 465,271 | 461,454 | 659,415 |
| | திறன் கடவுச்சீட்டு செலவு | 301,485 | 298,507 | |
| | | 766,756 | 759,961 | 659,415 |
| **13.6** | **தொழில்துறை தொடர்பு செயல்பாடுகள்** | | | |
| | அபிவிருத்தி மற்றும் மேற்பார்வை | 101,711 | 420,480 | 778,750 |
| | தொழில் வழிகாட்டலை வலிமைப்படுத்தல் | 527,427 | 304,024 | 1,498,550 |
| | தொழில் வழிகாட்டலை ஒழுங்குபடுத்துதல் | 189,884 | 602,097 | 394,174 |

| | 2024 (ரூ.) | 2023 (ரூ.) | 2022 (ரூ.) |
|---|---|---|---|
| வழிநடத்தல் குழுவை நடாத்துதல் | 1,337,590 | 968,345 | 642,440 |
| சிறப்பு வேலைத்திட்டம் | 2,045,265 | 2,088,063 | 1,474,629 |
| தொழில் அமர்வு | 6,540 | 291,710 | 310,515 |
| துறைசார் திறன்கள் சபை | 505,925 | 310,570 | 97,236 |
| | 4,714,341 | 4,985,290 | 5,196,293 |

**13.7 பதிவுப் புத்தகச் செலவு**

| | | | |
|---|---|---|---|
| பயிலுநர் பதிவுப் புத்தக அச்சடிப்பு | 9,023,582 | 10,069,041 | |
| பதிவுப் புத்தக விற்பனை கொடுப்பனவு | 966,260 | 380,987 | |
| விற்பனைச் செலவு | 9,989,842 | 10,450,028 | |

**14.1 குறுகிய கால நிகழ்ச்சித்திட்டம் (உள்ளூர்/ வெளியூர்)**

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ லங்கா டெலிகொம் | | 99,800 | |
| EFC | | 392,450 | |
| இலங்கை விமானப்படை | 118,800 | | |
| SLITHM | 108,405 | | |
| NIBM | | 116,450 | |
| சுற்றாடல் அமைச்சு | | 60,820 | |
| ILO (14.1 a) | 9,223,940 | - | 7,679,525 |
| GIZ (14.1b) | 7,930,167 | | |
| | 17,381,312 | 669,520 | 7,679,525 |
| ILO (14.1 a) | | | |
| NCS அபிவிருத்தி | 4,561,600 | 6,396,720 | 508,505 |
| | 2024 (ரூ.) | 2023 (ரூ.) | 2022 (ரூ.) |
| ILO ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | | 4,695,042 | 6,412,341 |
| பதவியணிக் கொடுப்பனவு | | 1,625,876 | 663,480 |
| திறன் கடவுச்சீட்டு செலவு | 161,400 | 332,800 | 95,200 |
| ILO 2024 நிகழ்ச்சித்திட்டம் - பதவியணி கொடுப்பனவு | 425,293 | | |
| ILO மாவட்டமட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி – தங்குமிடம் | 105,000 | | |
| ILO மாவட்டமட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி – உணவு மற்றும் சிற்றுண்டி | 298,643 | | |
| ILO மாவட்டமட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி – பிரயாணம் | 67,945 | | |
| ILO 2024 விழிப்புணர்வு நிகழ்ச்சி – வளவாளர் | 39,000 | | |
| ILO 2024 விழிப்புணர்வு நிகழ்ச்சி – நிகழ்விடக் கட்டணம் | 154,900 | | |
| ILO 2024 நடமாடும் சேவை – தங்குமிடம் | 295,000 | | |
| ILO 2024 நடமாடும் சேவை – உணவு மற்றும் சிற்றுண்டி | 126,370 | | |
| ILO 2024 நடமாடும் சேவை – வளவாளர் | 250,000 | | |
| ILO 2024 நடமாடும் சேவை – பிரயாணம் | 190,481 | | |
| ILO 2024 நடமாடும் சேவை – நிகழ்விடக் கட்டணம் | 20,000 | | |
| ILO நிகழ்நிலை அறிவுசார் கணிப்பீடு முறைமை | 2,492,309 | | |
| ILO நிகழ்நிலை வளவாளர் | 36,000 | | |
| | 9,223,940 | 13,050,438 | 7,679,525 |

| | | | |
|---|---|---|---|
| **GIZ (14.1b)** | | | |
| GIZ - கொள்கை அபிவிருத்திக்கான ஆலோசனை நிறுவன ஆதரவு | 187,311 | | |
| GIZ - பசுமை மொடியுள் அபிவிருத்திக்கான வளவாளர் கொடுப்பனவு | 632,981 | | |
| GIZ - பதவியணிக் கொடுப்பனவு | 2,028,175 | | |
| GIZ - போக்குவரத்து/ பிரயாணச் செலவு | 11,400 | | |
| GIZ - NAITA ஆல் வலிதாக்கம் | 4,601,300 | | |
| GIZ - வினா வங்கி மென்பாக அபிவிருத்தி | 469,000 | | |
| | 7,930,167 | | |
| **14.2 திறன்கள் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்** | | | |
| துறை சபைகள் | | 1,340,421 | 1,276,199 |
| | | 1,340,421 | 1,276,199 |

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு**

## 2024ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான
## தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய உப குறிப்புகள்

| | | 2024 (ரூ.) | 2023 (ரூ.) | 2022 (ரூ.) |
|---|---|---|---|---|
| **16.1** | **தொழிற்பாட்டிலுள்ள கடன்பட்டோர்** | | | |
| | சகுரா கணினி நிறுவகம் | 167,895 | 167,895 | 167,895 |
| | பலவித கடன்பட்டோர் | 136,800 | 136,800 | 136,800 |
| | | 304,695 | 304,695 | 304,695 |
| **16.2** | **அளிக்கப்பட்ட பதவியணிக் கடன் திருப்பிப்பெறக் கூடிய முற்பணம்** | | | |
| | பதவியணிக்கு அளிக்கப்பட்ட ஆணைக்குழுக் கடன் | 1,919,447 | 2,084,481 | 1,980,594 |
| | இடர்பாட்டுக் கடன் | 12,589,267 | 12,704,081 | 12,865,393 |
| | சுனாமி விசேட கடன் | 39,000 | 39,000 | 39,000 |
| | பண்டிகை முற்பணம் | 6,050 | 6,050 | 7,300 |
| | விசேட முற்பணம் | 7,064 | 11,063 | 6,213 |
| | சுனாமி விசேட கடன் (II) | 34,771 | 34,771 | 34,771 |
| | | 14,595,598 | 14,879,447 | 14,933,272 |
| **17.1** | **பதவியணி அலுவலர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம்** | | | |
| | அலுவலர்களுக்கான முற்பணம் | 12,100 | | 3,521,058 |
| | செயற்திட்ட முற்பணம் - உற்பத்தி மற்றும் பொறியியல் துறைச் சபை | | | 2,901,504 |
| | செயற்திட்ட முற்பணம் - நிர்மாண துறைச் சபை | | - | 2,410,706 |
| | NCS அபிவிருத்திக்கான முற்பணம் | 10,000 | 10,000 | 10,000 |
| | செயற்திட்ட முற்பணம் - சுற்றுலா துறைச் சபை | 8,809,876 | | |
| | | 8,831,976 | 10,000 | 8,843,268 |
| **17.2** | **வெளி நிறுவகங்களிடமிருந்து பெற வேண்டியவை** | | | |
| | SSDD | 6,023,945 | 6,023,945 | 5,979,7 |
| | ILO | | | 385,7 |
| | | 6,023,945 | 6,023,945 | 6,365,4 |
| **17.3** | **முற்கூட்டிய செலுத்துகை** | | | |
| | பணக் கடப்பு காப்புறுதி | 31,526 | 23,739 | 23,7 |
| | சேவை உடன்படிக்கைகள் | - | 176,240 | 25,3 |
| | | 31,526 | 199,979 | 49,039 |
| **17.4** | **மீளப்பெறக்கூடிய NVQ சான்றிதழ் அச்சடிப்புச் செலவு** | | | |
| | NAITA | 9,296,075 | 10,766,575 | 1,153,690 |
| | VTA | 4,404,489 | 14,923,489 | 3,118,191 |
| | National Youth Corp | 5,325 | 5,325 | 5,325 |
| | DTET | 11,324,000 | 8,704,500 | 5,076,808 |
| | NYSC | 4,639,585 | 2,936,085 | 228,910 |

| | | | | |
|---|---|---|---|---|
| | CGTTI | 467,750 | 74,750 | 74,750 |
| | Survey Department | 69,900 | 69,900 | 69,900 |
| | NGO Public and Private Institute | 291,264 | 291,264 | 291,264 |
| | Foreign Bureau | 1,982,500 | 2,958,000 | |
| | | 32,480,888 | 40,729,888 | 10,018,838 |
| **17.5** | **மீளப்பெறக்கூடிய NVQ பரீட்சைக் கட்டணம் - NAITA** | 875,000 | | |
| **22.1** | **கடன்கொடுத்தோர்** | | | |
| | தொழிற்பாட்டிலுள்ள கடன்கொடுத்தோர் | 9,596,876 | | 1,880,445 |
| | ஏனைய கடன்கொடுத்தோர் | | - | 5,101,007 |
| | | 9,596,876 | | 6,981,453 |
| **23.1** | **திறைசேரிக்கு செலுத்த வேண்டியவை** | | | |
| | கழிக்கப்பட்ட ராயல்டி | 548,192 | | 536,504 |
| | திரும்பப்பெறத்தகு நிதி | 47,761 | 47,761 | 47,761 |
| | | 595,954 | 47,761 | 536,504 |
| **23.2** | **உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியவை** | | | |
| | கழிக்கப்பட்ட பிடிப்பு வரி | | | 59,536 |
| | PAYE வரி | 8,994 | | |
| | கழிக்கப்பட்ட முத்திரைக் கட்டணங்கள் | 8,950 | 75 | 60,334 |
| | | 17,944 | 75 | 119,870 |
| **23.3** | **மீளசெலுத்தத்தக்க செயற்திட்ட மானியங்கள்** | | | |
| | குறுகிய கால திருப்பிச்செலுத்தத்தக்க மானியங்கள் (உள்ளூர்/வெளியூர்) | 4,730,073 | 5,155,322 | 2,892,945 |
| | TEDP திருப்பிச்செலுத்தத்தக்க மானியங்கள் | | | 3,492 |
| | ILO | 937,460 | | |
| | GIZ | 2,114,573 | | |
| | | 7,782,106 | 5,155,322 | 2,896,437 |
| **23.4** | **செலுத்த வேண்டிய ஆளுக்குரிய ஊதியங்கள்** | | | |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 152,459 | | |
| | சம்பளம் | 579,471 | 370,280 | 347,398 |
| | ஊழியர் சேமலாப நிதியம் | 1,016,391 | 229,899 | 232,443 |
| | | 1,748,320 | 600,180 | 579,842 |

## 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றிற்கான அட்டவணை

**அட்டவணை 01 - பணிக்கொடை ஏற்பாடு**

| பெயர் | ஊழியர் இல. | நியமனத் திகதி | சேவைக் காலம் | சம்பளம் (ரூ.) | பணிக்கொடை ஏற்பாடு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| கீர்த்தி W.G.S.A | 5 | 2001.02.01 | 23 | 70,975.00 | 816,213 |
| ஜீவன்த N.W.G.N. | 6 | 2001.02.01 | 23 | 70,975.00 | 816,213 |
| த சில்வா R.N.P. | 10 | 2001.03.01 | 23 | 62,665.00 | 720,648 |
| மஞ்சுளா D.B.R | 11 | 2001.03.01 | 23 | 70,975.00 | 816,213 |
| உதயகாந்தி Y.P.S. | 12 | 2001.02.01 | 23 | 70,975.00 | 816,213 |
| அசங்க ரங்கன M.N | 15 | 2001.09.03 | 23 | 50,180.00 | 577,070 |
| ஹெகொடஆராச்சி G.K | 20 | 2001.11.01 | 23 | 59,780.00 | 687,470 |
| இந்திக்க சம்பத் H.B | 24 | 2001.11.16 | 23 | 70,975.00 | 816,213 |
| தினேஷ் B.K.S | 26 | 2001.11.16 | 23 | 52,254.00 | 600,921 |
| அஜித் குசும் P.P. | 28 | 2001.12.03 | 23 | 107,175.00 | 1,232,513 |
| அநுர வீரக்கோன் W.M.T | 31 | 2002.07.01 | 22 | 109,535.00 | 1,204,885 |
| குமார W.V.P.C.J | 41 | 2005.05.16 | 19 | 48,290.00 | 458,755 |
| திருநாவுக்கரசு S. | 46 | 2005.01.04 | 19 | 100,365.00 | 953,468 |
| குணதிலக்க P.M.C.P | 47 | 2005.01.18 | 19 | 88,545.00 | 841,178 |
| கனேபொல G.A.M.U | 49 | 2005.01.02 | 19 | 111,715.00 | 1,061,293 |
| தர்மசேன U.A.P | 51 | 2005.01.03 | 19 | 86,635.00 | 823,033 |
| த சில்வா M.D.C | 56 | 2005.10.06 | 19 | 58,360.00 | 554,420 |
| சமரவீர R.J | 57 | 2005.11.21 | 19 | 100,005.00 | 950,048 |
| பந்துல P. | 58 | 2006.02.20 | 18 | 51,110.00 | 459,990 |
| அமரசிங்க A.S | 60 | 2006.05.16 | 18 | 115,285.00 | 1,037,565 |
| S.U.K.ரூபசிங்க | 65 | 2007.02.02 | 17 | 120,795.00 | 1,026,758 |
| M.விதாணபத்திரன | 66 | 2007.02.02 | 17 | 100,365.00 | 853,103 |
| P.P.P. நாணயக்கார | 70 | 2007.10.15 | 17 | 100,365.00 | 853,103 |
| W.J.L.A.தமயந்தி | 72 | 2007.12.12 | 17 | 96,185.00 | 817,573 |
| D.K.W.S.மங்கள | 73 | 2008.02.01 | 16 | 90,190.00 | 721,520 |
| R.G.A.Tகுமார | 74 | 2008.11.03 | 16 | 52,960.00 | 423,680 |
| N.D.விஜேசேகர | 75 | 2008.11.03 | 16 | 52,960.00 | 423,680 |
| S.S.கல்பகே | 76 | 2008.11.03 | 16 | 47,510.00 | 380,080 |
| G.C.J. த சில்வா | 78 | 2009.09.01 | 15 | 52,225.00 | 391,688 |
| K.S. சமீர | 84 | 2011.08.01 | 13 | 47,990.00 | 311,935 |
| G.C.S.M. நாணயக்கார | 85 | 2011.08.01 | 13 | 47,990.00 | 311,935 |
| B.S.J.விபுல்ஸி | 86 | 2012.01.02 | 13 | 81,975.00 | 532,838 |

| பெயர் | ஊழியர் இல. | நியமனத் திகதி | சேவைக் காலம் | சம்பளம் (ரூ.) | பணிக்கொடை ஏற்பாடு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| H.M.A.D.K.ஹேரத் | 87 | 2012.01.02 | 13 | 86,625.00 | 563,063 |
| D.N.I.D த சில்வா | 90 | 2012.01.02 | 13 | 80,600.00 | 523,900 |
| சன்தி மேனகா | 91 | 2012.03.01 | 12 | 40,710.00 | 244,260 |
| A.P.இந்திராணி | 92 | 2012.03.01 | 12 | 44,300.00 | 265,800 |
| P. முத்துகுமாரன | 95 | 2012.11.03 | 12 | 70,975.00 | 425,850 |
| K.LD.P.கருணாதாச | 101 | 2013.07.15 | 11 | 79,225.00 | 435,738 |
| கொண்டு செல்லப்பட்ட (C/F) | | | | | 25,750,816 |
| கொண்டு வரப்பட்ட (B/F) | | | | | 25,750,816 |
| T.A.W.மதுஷானி | 103 | 2013.07.15 | 11 | 55,770.00 | 306,735 |
| N.L.S.தயாரத்ன | 105 | 2013.09.02 | 11 | 46,300.00 | 254,650 |
| B.G.N.கமல்பிரிய | 106 | 2013.09.10 | 11 | 47,390.00 | 260,645 |
| H.R.M.U.U. விஜேபண்டார | 109 | 2014.01.16 | 10 | 81,975.00 | 409,875 |
| R. மாதன் | 110 | 2014.01.27 | 10 | 86,635.00 | 433,175 |
| E.A.K. த சில்வா | 112 | 2014.02.10 | 10 | 92,365.00 | 461,825 |
| H.L.K.S. குமார | 118 | 2014.09.22 | 10 | 47,090.00 | 235,450 |
| P.D.S. காரியவசம் | 119 | 2014.10.01 | 10 | 96,185.00 | 480,925 |
| A.H.N.சந்தமாலி | 122 | 2015.06.03 | 9 | 53,560.00 | 241,020 |
| L.K.கொஹொம்பன் | 125 | 2015.06.06 | 9 | 50,000.00 | 225,000 |
| B.L.K.P.சன்தீபனி | 129 | 2015.06.09 | 9 | 24,745.33 | 111,354 |
| I.M.G.H.லக்மால் | 131 | 2015.07.08 | 9 | 48,410.00 | 217,845 |
| H.M.V.N.ஹேரத் | 132 | 2015.07.22 | 9 | 50,810.00 | 228,645 |
| சுஜானி தில்ஹார | 134 | 2017.08.29 | 7 | 50,210.00 | 175,735 |
| P.W.S.பாஷினி | 136 | 2016.09.01 | 8 | 81,975.00 | 327,900 |
| N.ராஜபக்ஷ | 137 | 2016.09.01 | 8 | 80,600.00 | 322,400 |
| W.G.S.குமார | 138 | 2016.10.03 | 8 | 80,600.00 | 322,400 |
| E.C.U.குனதுங்க | 139 | 2016.09.01 | 8 | 80,600.00 | 322,400 |
| W.M.W.B.விஜேசிங்க | 140 | 2016.09.01 | 8 | 80,600.00 | 322,400 |
| K.A.D.H.லக்மினி | 141 | 2016.09.01 | 8 | 80,600.00 | 322,400 |
| ஜயமினி மதுஷா | 145 | 2017.05.22 | 7 | 43,800.00 | 153,300 |
| D.W.இஷானி | 149 | 2017.05.22 | 7 | 46,310.00 | 162,085 |
| ரவிந்து ரந்திக குமார | 151 | 2017.08.25 | 7 | 44,050.00 | 154,175 |
| V.N.ரம்மாவடு | 152 | 2017.08.25 | 7 | 50,210.00 | 175,735 |
| நுவங்கி கங்கானம்கே | 155 | 2018.04.02 | 6 | 52,225.00 | 156,675 |
| G.V.I.பியூமாலி | 156 | 2018.04.02 | 6 | 52,670.00 | 158,010 |
| G.L.மாசகோரல | 163 | 2018.04.02 | 6 | 76,475.00 | 229,425 |
| P.L.I.A த சொய்ஸா | 164 | 2018.04.02 | 6 | 52,225.00 | 156,675 |
| P.A.P.K. பனங்கல | 167 | 2018.07.02 | 6 | 70,975.00 | 212,925 |
| K.A.P.P. ஜெயவர்தன | 172 | 2021.03.01 | 3 | 49,010.00 | 73,515 |
| A.M.J.P.B.ஆல்வீர | 173 | 2021.03.01 | 3 | 49,010.00 | 73,515 |
| R.M.C.R.K.முனசிங்க | 174 | 2021.04.21 | 3 | 49,010.00 | 73,515 |

| பெயர் | ஊழியர் இல. | நியமனத் திகதி | சேவைக் காலம் | சம்பளம் (ரூ.) | பணிக்கொடை ஏற்பாடு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| H.G.S.ஹன்சானி | 175 | 2021.05.10 | 3 | 46,610.00 | 69,915 |
| J.A.M.S.சேனாரத்ன | 178 | 2021.05.10 | 3 | 46,610.00 | 69,915 |
| K.A.லலித்ததீர | 179 | 2021.04.27 | 3 | 129,515.00 | 194,273 |
| W.M.H. கலிந்து மதுரங்க | 181 | 2023.11.01 | 1 | 42,550.00 | 21,275 |
| | | | | | **33,868,522** |

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு**

## நிதிசார் சிறப்பம்சங்கள் 2024

| வகை/நோக்கின் தலைப்பு | திருத்திய மதிப்பீடு | உண்மையான செலவு | சதவீதம் |
|---|---|---|---|
| **மூலதனச் செலவு** | | | |
| | **ரூ.'000** | **ரூ.'000** | |
| நிலையான சொத்துக்கள் - கொள்வனவு | | | |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள்,ஆதனம் மற்றும் இயந்திரம் நிலையான சொத்துக்கள் மீதான முன்பணம் உட்பட | 11,025 | 10,568 | 96 |
| | **11,025** | **10,568** | **96** |
| **புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | | | |
| வாகனங்கள் | 1,000 | 942 | 94 |
| | **1,000** | **942** | 94 |
| அபிவிருத்தி மூலதனச் செலவுகள் | | | |
| தேசிய தேர்ச்சி தரங்கள் நாளதுவரையாக்கம் | 5,000 | 5,043 | 101 |
| ஆராய்ச்சி நடாத்துதல் | 1,000 | 694 | 69 |
| மாகாண மற்றும் துறைசார் VET திட்டங்கள் அபிவிருத்தி | 2,975 | | - |
| | **8,975** | **5,737** | **64** |
| **மொத்த மூலதனச் செலவு** | **21,000** | **17,247** | **82** |
| மீள்வருஞ் செலவு | | | |
| சம்பளமும் கூலியும் | 78,305 | 74,658 | 95 |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புச் செலவு | 9,600 | 7,297 | 76 |
| ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புச் செலவு | 2,400 | 1,824 | 76 |
| பணிக்கொடை | 1,695 | 695 | 41 |
| மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 6,269 | 6,204 | 99 |
| பயிலுநர்களுக்கான கொடுப்பனவு | 981 | 932 | 95 |
| தலைவருக்கான கொடுப்பனவு | 750 | 675 | 90 |
| | **100,000** | **92,285** | **92** |
| கௌரவக் கொடுப்பனவு (சபை அங்கத்தவர்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு) | **1,900** | **1,154** | **61** |
| பிரயாணச் செலவு | | | |
| உள்ளூர் | 1,300 | 1,271 | 98 |
| வெளியூர் | 1,500 | 1,042 | 69 |
| | **2,800** | **2,313** | **83** |

| | திருத்திய மதிப்பீடு | உண்மையான செலவு | சதவீதம் |
|---|---|---|---|
| வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுப் பொருட்களும் | 6,613 | 5,531 | 84 |
| எரிபொருட் செலவு | 7,319 | 6,854 | 94 |
| போக்குவரத்துச் செலவு | 2,658 | 2,491 | 94 |
| சீருடை | 140 | 140 | 100 |
| புதினப்பத்திரிகை மற்றும் சஞ்சிகைச் செலவு | 222 | 208 | 94 |
| ஏனைய சேவைச் செலவு | 846 | 534 | 63 |
| உபசரிப்புச் செலவு | 652 | 545 | 84 |
| | **18,450** | **16,303** | **88** |
| **பராமரிப்புச் செலவு** | | | |
| வாகன பராமரிப்பு மற்றும் காப்புறுதி | 10,166 | 10,200 | 100 |
| ஆதனம் மற்றும் இயந்திரம் | 1,436 | 1,534 | 107 |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 625 | 158 | 25 |
| கணினி பராமரிப்பு | 746 | 515 | 69 |
| எந்திர மற்றும் மின்னணுப் பொருட்கள் | 100 | 6 | 6 |
| பொதுப் பராமரிப்பு | 100 | 8 | 8 |
| | **13,173** | **12,421** | **94** |
| **ஒப்பந்த சேவைகள்** | | | |
| தொலைத்தொடர்பு | 6,929 | 6,833 | 99 |
| தபாற் கட்டணங்கள் | 401 | 219 | 55 |
| மின்கட்டணம் | 6,411 | 6,001 | 94 |
| குடிநீர் | 328 | 343 | 105 |
| வரிகள், வீதங்கள் மற்றும் வாடகை | 293 | 293 | 100 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 1,765 | 1,752 | 99 |
| சுத்திகரிப்புச் செலவு | 2,500 | 2,271 | 91 |
| நீதிசார் கட்டணங்கள் | 210 | 205 | 98 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 800 | 800 | 100 |
| பதவியணி நலன்புரி | 520 | 263 | 51 |
| சந்தா மற்றும் அங்கத்துவக் கட்டணங்கள் - உள்ளூர் மற்றும் வெளியூர் | 110 | 110 | 100 |
| பதவியணிப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 2,000 | 1,385 | 69 |
| பணக் கடப்பு காப்புறுதி | 40 | 30 | 75 |
| ஒப்பந்த உடன்படிக்கைகள் | 1,948 | 1,672 | 86 |
| | 24,255 | 22,177 | 91 |
| **தொழிற்படு செலவு** | | | |
| நிறுவன பதிவுச் செலவு | 8,500 | 6,715 | 79 |
| பாடநெறி தராதர அங்கீகாரச் செலவு | 7,600 | 6,035 | 79 |
| NVQ வேலைத்திட்டச் செலவு | 57,950 | 46,970 | 81 |
| NVQ கணிப்பீட்டு செலவு | 41,000 | 40,638 | 99 |
| தர முகாமைத்துவ முறைமை | 1,000 | 596 | 60 |
| IL நடவடிக்கைகள் | 8,900 | 4,714 | 53 |
| ISO செலவு | 290 | 19 | 7 |

| | திருத்திய மதிப்பீடு | உண்மை யான செலவு | சதவீதம் |
|---|---|---|---|
| LMI செலவு | 620 | 465 | 75 |
| IS வேலைத்திட்டச் செலவு | 342 | 301 | 88 |
| அரசகரும மொழி அமுலாக்கம் | 800 | 437 | 55 |
| புத்தக அச்சடிப்புச் செலவு | 12,420 | 9,989 | 80 |
| | 139,422 | 116,879 | 83 |
| பெறுமானத் தேய்வு | | 22,569 | |
| மொத்த மீள்வருஞ் செலவு | 300,000 | 286,121 | 95 |

**VOT/D/TVEC/1/2024/28** **2025 யூன் ஆந் திகதி**

**பணிப்பாளர் நாயகம்**
**மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு**

**மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (''ஆணைக்குழு'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களிற்கு உரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ)** ஆணைக்குழுவின் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கிரயம் ரூபா 1,263,544 ஆன 5,000 சான்றிதழ் பத்திரங்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் 06 மேலங்கிகள் இறுதி இருப்பாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் இருப்பு மற்றும் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2025 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட அச்சிடல் இயந்திரம் மற்றும் சேவர் முறைமைக்காக மீளாய்வாண்டின் போது முற்பணம் வழங்கப்படாமல் மற்றும் கடன் கொடுத்தோர் ஏற்படுத்தப்படாமல் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் கைப்பற்றல் முற்பணம் மற்றும் கடன்கொடுத்தோராக ரூபா 10,669,522 கணக்கு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றம் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சான்றிதழ் பத்திரங்களை விநியோகித்தமைக்காக 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு 06 வெளி நிறுவனங்களில் இருந்து ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 32,114,399 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களிலிருந்து கிடைத்த உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 6,281,029 ஆனமையால் மீதிகளுக்கிடையே ரூபா 25,833,370 வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) சான்றிதழ் பத்திரங்களை அச்சிடுவதற்காக 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,371,536 மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 ஆணைக்குழுவின் 2024 இன் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற ஆணைக்குழுவின் 2024 இன் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் முன்னர் எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலும், என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளினதும் அடிப்படையிலும், இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையான பிழையாகக் காண்பிக்கப்பட்ட விடயங்கள் இருக்குமாயிருந்தால் அதனை உறுதிப்படுத்தும் வரை, அந்த விடயங்கள் எதுவும் என்னால் அறிக்கையிடப்படுவதில்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆணைக்குழு தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால்,

பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஆணைக்குழுவின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**2.** ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை ஆணைக்குழு பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள (அ) மற்றும் (ஈ) பந்திகள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும் வேறு, எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஆணைக்குழுவின் நிர்வாக சபையின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு ஆணைக்குழு சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் உள்ளது என.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது ஆணைக்குழுவின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதிருந்தது என.

| சட்டங்கள், விதிகள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ)** 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PE/COP/POLI/Circular என்ற நிதி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையுடன் விநியோகிக்கப்பட்ட கைநூலின் 3.2(i) ஆம் பந்தி | திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ஆணைக்குழுவின் நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மீளாய்வாண்டின் போது 16 வகையான படிகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 42,340,686 ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் அந்த பணிகளுக்காக பதிவு செய்த வெளி நபர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ)** 2016 பெப்ரவரி 26 ஆம் திகதிய இலக்கம் MSDVT/SSDP/2016-1 என்ற திறன் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | 2017 ஆம் ஆண்டு முதல் National Vocational Qualification 1 முதல் 6 வரையான பாடநெறிகள் நடத்துகின்ற சகல நிறுவனங்களினாலும் தர முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபித்தல் கட்டாயமாக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு நிறுவனமும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனினும் ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக ஆணைக்குழுவினால் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** தாபனவிதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் (ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான விதி) 29.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது நாளாந்த வருமானம் வங்கியில் இடுவதற்கு ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காதிருந்தமை மற்றும் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும் போது கையிலுள்ள காசு தேறாதிருந்த வைப்பாக காண்பித்து நடவடிக்கை எடுத்திருந்தமை சுட்டிக்காட்டியதன் காரணமாக ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது தொடர்பான முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று கணக்காய்வுத் திகதியான 2025 மே 23 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

**2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க தொகுதியின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.**

| அதிகாரம், இலக்குகள் மற்றும் பணிகள் | இணங்காமைகள் |
|---|---|
| 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி | |

| ஆணைக்குழு சட்டம் | |
|---|---|
| (அ) 2 ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு | ஆணைக்குழு ஸ்தாபிக்கும் அடிப்படை நோக்கங்களில் ஒன்றான தேசிய தொழிற்கல்வி பயிற்சி திட்டமொன்றைத் தயாரித்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியில் வெளியிடும் பணிகள் ஆணைக்குழு ஸ்தாபித்து 32 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது. |
| (ஆ) 14(1), 15(1) உப பிரிவுகள் மற்றும் 10(3)(அ) பிரிவு | ஆணைக்குழுவில் பதிவு செய்திருந்த நிறுவனங்களுக்கிடையே பதிவு இரத்துச் செய்யப்பட்டு 20 வருடங்களுக்கு மேற்பட்ட 18 நிறுவனங்களும், 05 இற்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த 574 நிறுவனங்களும் பதிவினைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்திருக்கவில்லை. மேலும் 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 55 நிறுவனங்கள் பதிவினைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 மே 22 ஆம் திகதி வரையிலும் அந்த நிறுவனங்களின் பதிவு புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2023 செப்டெம்பர் 01 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையான ஆணைக்குழு சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றாத தொழிற் பயிற்சி நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் V பகுதியில் காண்பிக்கப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக தேவையான பிரகாரம் கட்டளைகள் வழங்க வேண்டிய நீதிமன்றத்திற்கு குறித்துரைத்த ரீதியில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் சட்ட திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகள் இந்த அறிக்கை திகதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் மேல் மாகாணத்திற்கான தொழிற் கல்வி பயிற்சித் திட்டமொன்றை தயாரித்தல் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது மூலதன மானியமாக திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற தொகையில் ரூபா 941,575 மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

**ஒப்பம்: ஜீ.எச்.டீ. தர்மபால**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)**

**2025.08.07** **TVEC/E2/Audit/2024**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**கணக்காய்வாளர் திணைக்களம்**

**306/72, பொல்தூவ வீதி**

**பத்தரமுல்லை**

**<u>31 டிசம்பர் 2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு12 இன் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</u>**

மேற்படி விடயம் தொடர்பான தங்களது 2025.06.27 திகதியிடப்பட்ட இல. VOT/D/TVEC/1/2024/28 கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்களை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்

1. நிதி அறிக்கை

1.2. தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

(அ) தற்போதுள்ள 5000 தொகையுடைய சான்றிதழ்களின் பெறுமதி உள்ளடக்கப்படாமையால் கணக்கீடு காட்டப்பட்டுள்ள வழுக்கள் முன்னைய வருட ஒப்பீடு செய்யப்பட்டு 2025 ஆம் வருடக் கணக்குகளில் காட்டுவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு அது சரிசெய்யப்படும்.

(ஆ) இக்கொள்வனவின் கீழ் சம்பந்தப்பட்ட கொள்வனவை மேற்கொள்வதற்கு டெண்டர் அனுமதி வழங்கப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட நிலையான சொத்துக்கள் (அச்சுப்பொறி மற்றும் சேர்வர் சிஸ்டம்) 2024.12.31 வரையிலும் இவ்வாணைக்குழுவுக்கு கிடைக்காததுடன் அவை 2024 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. அச்சுப்பொறியில் குறித்துக்குரைக்கப்பட்ட விவரக்குறிப்புகள் தொடர்பாக எழுந்த சிக்கல்கள் காரணமாக வழங்குநர்களுக்கு விவரக்குறிப்புகளில் உள்ளவாறு அச்சுப்பொறியை ஆணைக்குழுவில் பொருத்தும் வரையில் செலுத்தப்பட வேண்டிய தொகை தாமதிக்கப்பட்டுள்ளது.

(இ) சான்றிதழ் அச்சடித்து விநியோகித்தல் நிமித்தம் சம்பந்தப்பட்ட அரச நிறுவகத்தால் 2024 ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையை மட்டும் குறிப்பிட்டு தெரிவிக்கபட்டிருப்பினும் 2024 ஆண்டில் ஆரம்ப மீதி தொடர்பாக கருத்திற்கொள்ளப்படவில்லை. எம்மால் நிதி அறிக்கைகளில் 2024 ஆம் ஆண்டிற்கு மட்டுமல்லாது முழு காலவரையின் போது சம்பந்தப்பட்ட நிறுவகத்திலிருந்து

2024.12.31 திகதியன்று பெறப்பட வேண்டிய தொகையாகும். இது தொடர்பான நிதிசார் ஒதுக்கங்கள் ஒதுக்கப்படவில்லை அடிப்படையில் சில அரச நிறுவகங்கள் பல வருடங்களான பழைய செலுத்தப்பட வேண்டிய தொகையை செலுத்தமுடியாமல் உள்ளதென தெரிவித்துள்ளன. அதற்கமைய சம்பந்தப்பட்ட நிறுவகங்களுடன் கலந்துரையாடி திறைசேரியின் இணக்கத்துடன் பழைய செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை கொடுக்கல் வாங்கலாக குறிப்பிட்ட இப் பெறப்பட வேண்டிய தொகை தொடர்பாக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஈ) 2025.01.17 திகதிய அரச அச்சகத் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட இன்வொயிஸின் பிரகாரம் ரூ. 7,404,771 தொகை செலுத்தப்பட்டது. எவ்வாறெனினும் அச்சகத் திணைக்களத்துடன் கலந்துரையாடி செலுத்தப்பட வேண்டிய மீதியை உறுதிசெய்வதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

விதிகள்/ உத்தரவுகள் பற்றிய குறிப்பு

(அ) நிர்வாக சபையின் அனுமதியுடன் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஆற்றப்படும் பணிகளில் அலுவலகத்திற்கு வெளியே அல்லது அலுவலக நேரத்திற்குப் பிறகு ஆற்றப்படும் பணிகளுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சம்பந்தப்பட்ட அனுமதியைப் பெறுவதற்காக கடிதத்துடன் உரிய ஆவணங்கள் அனுப்பப்பட்டதுடன், அக்கொடுப்பனவுகள் தொடர்பாக மேலதிக தகவல்கள் அத்திணைக்களத்தின் கடிதத்திற்கு அமைய 2025.04.10 திகதியன்று அனுமதிக்காக அனுப்பப்பட்டன. அதன்படி, சம்பந்தப்பட்ட அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

(ஆ) 2019 முதல் 2023 வரை நாட்டில் நிலவிய சூழ்நிலைகளை முகங்கொடுத்து அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள பல பயிற்சி நிறுவனங்கள் முறையாக நடாத்திக் கொண்டுபோக முடியவில்லை, அத்துடன் முறையாகப் நடாத்திக்கொண்டுச் சென்ற நிறுவனங்களிலும் கூட மேலும் பராமரிக்கப்பட்ட நிறுவனங்களில் கூட தர முகாமைத்துவ முறைமையை செய்படுத்துவது கடினமாக இருந்தது. அக்கால கட்டத்தில் பாடநெறிகளை நிகழ்நிலை (ஆன்லைன்) முறையில் கற்பித்தல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மற்றும் வகுப்புகளுக்கு நேரடி வருகையும் குறைவாக இருந்தது. பின்னர், பொருளாதாரச் சரிவு மற்றும் பயிற்சிப் பொருட்கள் முறையாகக் கிடைக்காதது போன்ற சிக்கல்கள் காரணமாக பாடநெறிகளை தரமான முறையில் நடாத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. இருப்பினும், 2024 ஆம் ஆண்டளவில் பயிற்சி நிறுவனங்கள் அழைக்கப்பட்டு தர முகாமைத்துவ முறைமையை மீண்டும் பயிற்சி நிலையங்களில் நிறுவுவதற்காக இரண்டு (02) செயலமர்வுகள் நடாத்தப்பட்டு அம்முறைமையை நிறுவுவதற்காக விண்ணப்பிக்குமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தர முகாமைத்துவ முறைமைகள் வழிகாட்டுதல் கையேடு தற்போது ISO 21001:2018 இன் கீழ் புதுப்பிக்கப்பட்டு வருவதுடன் அதன் பணிகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளன.

(இ) தற்போது முறையான விசாரணை நடத்துவதற்காக ஒழுக்காற்று விசாரணை அலுவலரொருவரையும் மற்றும் நன்னடத்தை அலுவலரொருவரையும் நியமிப்பதற்காக ஆணைக்குழு நிர்வாக சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், இந்த முறையான ஒழுங்கு விசாரணையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.3

(அ) தேசிய தொழிற்கல்வி அபிவிருத்தித் திட்டம்

இது தொடர்பாக, இல. SDVT/PL/10/01 மற்றும் 2024.04.29 திகதியிடப்பட்ட கடிதமொன்று அமைச்சினால் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், அதில் இந்த அபிவிருத்தித் திட்டத்தில் ஜனாதிபதி செயலகம் கவனம் செலுத்தி எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அமைச்சிடம் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

அந்தக் கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, ஜனாதிபதி செயலகம் இல. PS/SAD/EDU/NEPF/03 மற்றும் 2024/06/05 திகதியிடப்பட்ட தனது கடிதம் மூலம் கல்வி அமைச்சிடம் தெரிவித்தது. மேலும் கல்வி அமைச்சு இல. SDVT/PL/10/01 மற்றும் 2024.06.07 திகதியிடப்பட்ட தனது கடிதம் மூலம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு ஒரு கடிதத்தை அனுப்பியது. தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பை செயல்படுத்துவது தொடர்பாக அமைச்சரவை உபகுழு மற்றும் மேற்பார்வைக் குழுவால் தொழிற்கல்வி மற்றும் திறன்கள் கல்வித் துறையில் செய்யப்படவுள்ள முன்மொழியப்பட்ட நிர்வாக மற்றும் சட்ட மாற்றங்கள், தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க திறன்கள் கல்வித் துறையின் வளர்ச்சி தொடர்பான கொள்கை பரிந்துரைகள் ஆகியவை தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறைக்கான தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் சூழல் மற்றும் இலக்குகளை தீர்மானிப்பதில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதால், முன்மொழியப்பட்ட நிறுவன மற்றும் கொள்கை கட்டமைப்பை நிறுவிய பின்னர் அதற்கேற்ப குறிப்பிட்ட திட்டத்தைத் தயாரிப்பது பொருத்தமானது என்று மேலும் அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து அமைச்சில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டதுடன், மேலும் கல்வி சீர்திருத்தங்கள் ஏற்கனவே நடந்து வருகின்றன என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அந்த நடவடிக்கைகளுக்குப் பிறகு இந்த அபிவிருத்தித் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டு கல்வி அமைச்சின் மூலம் ஜனாதிபதி செயலகத்திற்கு மீண்டும் அனுப்பப்படும்.

(ஆ)இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பல நிறுவனங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டிருந்தாலும், பதிவு புதுப்பிப்புக்காக நிறுவனங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில்லை. மற்ற நிறுவனங்கள் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைவதாலும் தமது பதிவை புதுப்பிப்பதில்லை. கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தாலும், அந்நிறுவனங்களை தொடர்புகொண்டு விசாரிக்கும்போது நிறுவனங்கள் மதிப்பீட்டிற்குத் தயாராக இல்லை என்றும் கூறுகின்றன.

எனினும், நீண்ட காலமாகப் பதிவினைக் கோராமல், TVEC அமைப்பில் மூடப்பட்ட நிறுவனங்களாக அறிவிக்கப்பட்ட நிறுவனங்கள் பற்றிய தகவல்கள்

பெறப்பட்டுள்ளன. இது வரையி 846 நிறுவனங்கள் மூடப்பட்ட நிறுவனங்களாக அடையாளம் காணப்பட்டு, TVEC அமைப்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2.3 பிற விடயங்கள்

(அ) 20.09.2023 திகதியன்று, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு, முன்மொழியப்பட்ட புதிய திருத்தங்கள் அடங்கிய சட்ட வரைவையும் மற்றும் வரைவு அமைச்சரவைப் பத்திரத்தையும் அமைச்சிடம் அனுப்பியது.

இல. MSDVT/VT/3/5/2023 மற்றும் 2024.11.28 திகதியிட அமைச்சின் கடிதத்தின் மூலம் அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு, திருத்தப்பட்ட சட்ட வரைவு தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எமக்கு தெரிவிக்கப்பட்டது.

அதன் பிறகு, 2025.01.20 திகதியன்று தொழிற்கல்விப் பிரிவின் மேலதிக செயலாளரின் (தொழில் பயிற்சி) பங்கேற்புடன் அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு, பல கூட்டங்களுக்குப் பிறகு, கலந்துரையாடப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட ஆவணத்தை, 2025.04.29 திகதியன்று மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு அமைச்சிற்கு அனுப்பியது.

மேலே குறிப்பிடப்பட்ட சட்ட வரைவுத் திருத்தம், பதிவு செய்யப்படாத பயிற்சி நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான திருத்தங்களை உள்ளடக்கியுள்ளது.

(ஆ) மேல் மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் (VET) திட்டத்தைத் தயாரித்தல்

மேல் மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தை உருவாக்கும் பணி முதன்முதலில் 2013 இல் தொடங்கப்பட்டது. இருப்பினும், பணியின் அளவு மற்றும் சிக்கற் தன்மை காரணமாக அது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. பின்னர், 2022 இல் இந்தப் பணியை மீண்டும் தொடங்க முடிவு செய்யப்பட்டதுடன் இந்தத் திட்டத்தினை தயாரித்து முடிப்பதற்காக TVEC இன் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் கணக்கெடுப்பு செயல்முறை டிசம்பர் 2022 இல் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது. பின்வரும் நான்கு முக்கிய தொழில் துறைகளில் தொழில்தருநர்கள் கணக்கெடுப்புக்காகக் கருதப்பட்டன:

- தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் (ICT)
- கட்டுமானம்
- ஹோட்டல் மற்றும் சுற்றுலா
- உற்பத்தி

தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் ஆகியவை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

தொழில்கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தை இறுதி செய்வதற்கு முன்பு, மேல் மாகாண சபையின் அலுவலர்களுடன் பல சிறப்பு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அதன் பிறகு, நவம்பர் 26, 2024 அன்று மேல் மாகாண ஆளுநரின் தலைமையில் மாகாணத்தில் உள்ள பல்வேறு பங்குதாரர்களின் பங்கேற்புடன் செல்லுபடிதாக்கல் செயலமர்வு நடைபெற்றது.

இந்தச் செயலமர்வைத் தொடர்ந்து திட்ட அறிக்கை ஆளுநரால் அதிகாரப்பூர்வமாகச் செல்லுபடியாக்கம் செய்யப்பட்டது.

(இ) இது தொடர்பாக சோதிப்பு நடாத்தி சரி செய்வதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.



**முனைவர் K.A. லலித்தீர**
**பணிப்பாளர் நாயகம்**



**Tertiary and Vocational Education Commission**
Ministry of Education
**'Nipunatha Piyasa', 354/2, Elvitigala Mawatha,**
**Colombo 05, Sri Lanka**
**Tel; +94 (0)11 7608000, Fax: +94 (0)11 2555007**
**email: info@tvec.gov.lk**
**Web: www.tvec.gov.lk**